# இறைவன் மீது ஆணையாக!

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட
மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
அவர்களின் மேற்கோள்களிலிருந்து

தொகுப்பு
பஷீருத்தீன் அல்லாதீன்

# Khuda ki Qasam
(in Tamil)

Compiled by
Bashiruddin Alladin
Hyderabad

தூய உள்ளத்திற்கு அதிக அற்புதங்கள் தேவையில்லை
படைத்தவனைப் பற்றிய அச்சம் இருக்குமென்றால் ஓர் அடையாளம் போதுமானது

# இறைவன் மீது ஆணையாக!

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் மேற்கோள்களிலிருந்து**

**தொகுப்பு:**

**பஷீருத்தீன் அல்லாதீன்**

அச்சிட்டோர்:
ஃபஸ்லே உமர் பிரின்டிங் பிரஸ், காதியான்

# இறைவன் மீது ஆணையாக!


**Tamil verson of the Book**

## Khuda ki Qasam

(From the writings of Hazrat Mirza Ghulam Ahmad
The Promised Messiah and Imam Mahdi)

Book Name : Khuda ki Qasam
Compiled by : Basheeruddin Alladeen
Year : 2016
Copies : 1000
Translated by : Moulavi O.M. Muzzammil Ahmad
Published by : Rashid Muhammad Alladin

Noor-ul-Islam Toll Free No : 1800 30 10 21 31
Tamilnadu Toll Free No : 1800 425 40000



0707-S1000

**Hadhrat Mirza Ghulam Ahmad Qadiani**

The Promised Messiah عليه السلام

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

نحمدہ و نصلی علی رسولہ الکریم          و علی عبدہ المسیح الموعود

# வேண்டுகோள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் பெயரில் ஆணையிட்டுக் கூறியிருப்பவற்றை அவர்களின் நூல்களிலிருந்தே ஒன்றாகத் தொகுத்து வெளியிடுகிறேன். அல்ஹம்து லில்லாஹ். எவர்களுடைய உள்ளங்களில் இறையச்சம் இருக்கிறதோ அவர்கள் இதைப் படித்து அன்னாரின் உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக இதை வெளியிடுகிறேன். இந்த எளியவன் மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மது ஹுஸைன் சாஹிப் சாஜிது மற்றும் மதிப்பிற்குரிய ராஷிது முஹம்மது அல்லாதீன் சாஹிப் ஆகியோருக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். அவர்களின் மதிக்கத்தக்க ஒத்துழைப்பினால் இந்நூலை வெளியிடுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்கியிருக்கிறான். ஜஸாஹுமுல்லாஹ். அஹ்ஸனல் ஜஸா. இந்நூலை வெளியிடுவதற்கு முன்பே டாக்டர் முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்கள் 25, மே 1988 அன்று காலமாகி விட்டார்கள் என்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.(இந்நூலின் முதல் பதிப்பு 30, நவம்பர் 1988 அன்று வெளியானது). அல்லாஹ் மர்ஹூம் அவர்களுக்கு மக்ஃபிரத்தை வழங்குவானாக. அவர்களின் அந்தஸ்தை மேன்மேலும் உயர்த்துவானாக. மேலும் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஆகியோரின் நெருக்கத்தில் இடமளிப்பானாக. ஆமீன். அல்லாஹ் அவர்களின் மனைவி ஜனாபா சித்தீகா

பேகம் சாஹிபா (அலி முஹம்மது அல்லாதீன் அவர்களின் மகள்) அவர்களுக்கும் சின்னச் சின்ன அப்பாவிக் குழந்தைகளுக்கும் பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் இருப்பானாக. அனைவரையும் தனது அடைக்கலத்திலும் பாதுகாப்பிலும் வைப்பானாக. ஆமீன்.

டாக்டர் சாஹிப் அவர்களின் பேரார்வத்தின் அடிப்படையில் இந்த எளியவன் இந்நூலை மர்ஹூம் டாக்டர் கலீல் அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். அவர்களை இந்த எளியவனும் மாணவப் பருவத்திலிருந்து அறிவேன். அவர் நன்மை மற்றும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் மீது மிகவும் நேசம் கொண்டவராக விளங்கினார். அல்லாஹ் இரண்டு மர்ஹூம்களுக்கும் மன்னிப்பை வழங்குவானாக. அவர்களின் அந்தஸ்துகளை அதிகமதிகமாக உயர்த்துவானாக. ஆமீன்.

இறுதியாக எளியவன் எனக்காகவும் துஆவுக்காக விண்ணப்பிக்கிறேன். அல்லாஹ் இந்த எளிய முயற்சியை ஏற்றுக் கொள்வானாக. மேலும் அதிகமாக மார்க்கத்திற்கு தொண்டு செய்யும் நல்வாய்ப்பை வழங்குவானாக. முடிவை நல்லதாக ஆக்குவானாக. ஆமீன்.

எளியவன் நாஸிர் சாஹிப் தஃவத்தோ தப்லீக் காதியான் (மவ்லானா ஷரீஃப் அஹ்மது அமீனி) அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். அவர்கள் இந்நூலுக்கு முன்னுரை எழுதினார்கள். மேலும் இந்நூலுக்கு பெயரும் இட்டு இதை வெளியிடுவதற்கான அனுமதியும் வழங்கினார்கள். ஜஸாஹுல்லாஹ். அஹ்ஸனல் ஜஸா.

துஆவுக்காக வேண்டுபவர்
**பஷீருத்தீன் அல்லாதீன்**
தப்லீக் மற்றும் தர்பிய்யத் செயலர்,
செகந்திராபாத்
30, நவம்பர் 1988

# முன்னுரை

இந்த இறுதி காலத்தில் ஹஸ்ரத் ஈஸப்னு மர்யம் (அலை) அவர்கள் வானத்திலிருந்து பூத உடலுடன் இறங்குவார் என்பதும், ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் முஹம்மதிய்ய உம்மத்திலிருந்து தோன்றுவார்; அவர்கள் இருவரும் சேர்ந்து இஸ்லாமிய மார்க்கத்தை பரப்புவார்கள் என்பதும் முஸ்லிம்களின் பொதுவான கொள்கையாக இருக்கிறது. ஆக, இறுதி காலத்தில் இரு ஆன்மீக நபர்கள் தோன்றுவார்கள் என பாமர முஸ்லிம்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் திருக்குர்ஆனிலிருந்தும் ஆறு ஆதாரப்பூர்வமான ஹதீஸ் நூல்களிலிருந்தும்நிரூபணமாவது என்னவென்றால், رَسُولًا إِلَى بَنِي إِسْرَائِيلَ(திருக்குர்ஆன் 3:50) அதாவது இஸ்ராயீல் மக்களுக்காக அனுப்பப்பட்ட ஈஸப்னு மர்யம் என்பவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு மற்ற நபிமார்களைப் போன்று மரணமடைந்து விட்டார்கள். அவர்கள் இந்த பூத உடலுடன் வானத்திற்கு செல்லவுமில்லை; அவர் அங்கே உயிருடனும் இல்லை; அவர் அந்த பூத உடலுடன் இக்காலத்தில் உலகில் இறங்கவும் மாட்டார். ஆயினும் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காகவும் உம்மத்தை சீர்திருத்துவதற்காகவும் முஹம்மதிய்ய உம்மத்திலிருந்தே ஒருவர் தோன்றுவார் என்பது ஹதீஸுகளிலிருந்து நிரூபணமாகின்றது. அவர் இஸ்லாமிய மரபுச் சொல்லில் ‘அல் இமாமுல் மஹ்தி’ என்று அழைக்கப்படுகிறார். மேலும் அவரே ஆன்மீகமான முறையில் ஹஸ்ரத் மஸீஹிப்னு மர்யமுக்கு ஒப்புமையுள்ளவராக இருப்பார். ஏனெனில் ஹதீஸில் இவ்வாறு வருகிறது:

1. وَلَا الْمَهْدِيُّ إِلَّا عِيسَى ابْنِ مَرْيَم

*(சுனன் இப்னி மாஜா. மொழியாக்கம் தொகுதி 3 கிதாபுல் ஃபிதன். பாபு ஷித்ததிஸ் ஸமான் பக்கம் 458 ஹதீஸ் எண்: 4039 வெளியீடு இஃதிகாத் பப்ளிஷிங் ஹவுஸ் புது தில்லி 110 002)*

2. يُوشِكُ مَنْ عَاشَ مِنْكُمْ أَنْ يَلْقَى عِيسَى ابْنَ مَرْيَمَ إِمَامًا مَهْدِيًّا حَكَمًا وَعَدْلًا

*(முஸ்னது அஹ்மதிப்னு ஹம்பல். தொகுதி 2 பக்கம் 411 எகிப்து பதிப்பு மற்றும் கன்ஸுல் உம்மால் தொகுதி 14 பக்கம் 263 ஹதீஸ் எண்: 38656 வெளியிடுவோர் முஅஸ்ஸத்துர் ரிஸாலத்தி. பைரூத் 1989)*

3. كَيْفَ أَنْتُمْ إِذَا نَزَلَ ابْنُ مَرْيَمَ فِيكُمْ وَإِمَامُكُمْ مِنْكُمْ

*(சஹீஹ் புகாரி. கிதாபு அஹாதீஸுல் அன்பியாயி. பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம்)*

அதாவது ஈஸப்னு மர்யம்தான் இமாம் மஹ்தி ஆவார்கள். மேலும் அவர் தீர்ப்பளிப்பவராகவும், நீதி தீர்ப்பவராகவும் இருப்பார்கள். மேலும் உங்களின் இமாம் உங்களிலிருந்தே தோன்றுவார். அதாவது முஹம்மதிய்ய உம்மத்திலிருந்து தோன்றுவார்.

இந்த நபிமொழிகளிலிருந்து, வரக் கூடிய வாக்களிக்கப்பட்டவர் ஒருவர்தான் என்றும் அவர் இமாம் மஹ்தியாகவும், மர்யமின் மகனாகிய ஈஸாவின் நிழலாகவும் அவரை ஒத்தவராகவும் இருப்பார் என்றும் தெரிகிறது. ஏனெனில் ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதைப் போன்று, மர்யமின் மகன் ஈஸா இஸ்ரவேல் மக்களுக்காகத் தோன்றிய இறைதூதர் ஆவார். அவர் மரணமடைந்து விட்டார். அவர் மீண்டும் இந்த உலகில் வருவார் என்ற கேள்விக்கே இடமில்லை.

2. அல்லாஹ்வின் புறமிருந்து வரும் எந்தவொரு தூதரின் வாதத்தின் உண்மைக்கு இருக்கும் மற்ற சான்றுகள், சாட்சிகளுடன் அவர் தனது வாதத்தை முழுமையான உறுதியுடனும், உறுதிப்பாட்டுடனும் இறைவனை சாட்சியாளனாக்கி எடுத்து வைப்பதும் ஒரு சான்றாகும். ஏனெனில் இறைவன் உண்மையாளரையும், பொய்யரையும் அறிகின்றான். பொய்யரும், இட்டுக்கட்டிக் கூறுபவரும் இறைவனின் ஆதரவையும் உதவியையும் ஒருபோதும் பெறுவதில்லை. இறைவனின் கட்டளையாகிய قَدْ خَابَ مَنِ افْتَرَى (எவர் இட்டுக்கட்டிக்

கூறினாரோ அவர் தோல்வி அடைந்தார் 20:62) என்பதற்கிணங்க அவர் இறைவனின் ஆதரவு மற்றும் உதவியிலிருந்து பேறிழந்தவராகவும் தோல்வி கண்டவராகவும் இருப்பது மட்டுமின்றி சூரா ஹாக்கா

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ ○ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ○ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ ○

45,47ன்படி இறை கோபத்திற்கும் ஆளாகிறார்.

3. ஹதீஸில் வருகிறது: ஒருமுறை ஒருவர் மதீனா வந்தார். அவர் நபித்தோழர்கள் இருக்கும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், உங்களின் தூதுத்துவ வாதத்தை இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுங்கள் என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது வாதத்தை ஆணையிட்டுக் கூறியபோது அப்போதே அவர் ஈமான் கொண்டு விட்டார். புகாரியில் இந்த ஹதீஸ் இவ்வாறு வருகிறது:

عَنْ أَنَسِ بْنَ مَالِكٍ يَقُولُ بَيْنَمَا نَحْنُ جُلُوسٌ مَعَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي الْمَسْجِدِ دَخَلَ رَجُلٌ عَلَى جَمَلٍ فَأَنَاخَهُ فِي الْمَسْجِدِ ثُمَّ عَقَلَهُ ثُمَّ قَالَ لَهُمْ أَيُّكُمْ مُحَمَّدٌ وَالنَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مُتَّكِئٌ بَيْنَ ظَهْرَانَيْهِمْ فَقُلْنَا هَذَا الرَّجُلُ الْأَبْيَضُ الْمُتَّكِئُ فَقَالَ لَهُ الرَّجُلُ يَا ابْنَ عَبْدِ الْمُطَّلِبِ فَقَالَ لَهُ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَدْ أَجَبْتُكَ فَقَالَ الرَّجُلُ لِلنَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنِّي سَائِلُكَ فَمُشَدِّدٌ عَلَيْكَ فِي الْمَسْأَلَةِ فَلَا تَجِدْ عَلَيَّ فِي نَفْسِكَ فَقَالَ سَلْ عَمَّا بَدَا لَكَ فَقَالَ أَسْأَلُكَ بِرَبِّكَ وَرَبِّ مَنْ قَبْلَكَ آللهُ أَرْسَلَكَ إِلَى النَّاسِ كُلِّهِمْ فَقَالَ اللَّهُمَّ نَعَمْ قَالَ أَنْشُدُكَ بِاللهِ آللهُ أَمَرَكَ أَنْ نُصَلِّيَ الصَّلَوَاتِ الْخَمْسَ فِي الْيَوْمِ وَاللَّيْلَةِ قَالَ اللَّهُمَّ نَعَمْ قَالَ أَنْشُدُكَ بِاللهِ آللهُ أَمَرَكَ أَنْ نَصُومَ هَذَا الشَّهْرَ مِنَ السَّنَةِ قَالَ اللَّهُمَّ نَعَمْ قَالَ أَنْشُدُكَ بِاللهِ آللهُ أَمَرَكَ أَنْ تَأْخُذَ هَذِهِ الصَّدَقَةَ مِنْ أَغْنِيَائِنَا فَتَقْسِمَهَا عَلَى فُقَرَائِنَا فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اللَّهُمَّ نَعَمْ فَقَالَ الرَّجُلُ آمَنْتُ بِمَا جِئْتَ بِهِ وَأَنَا رَسُولُ مَنْ وَرَائِي مِنْ قَوْمِي وَأَنَا ضِمَامُ بْنُ ثَعْلَبَةَ أَخُو بَنِي سَعْدِ بْنِ بَكْرٍ

‘‘அனஸ் பின் மாலிக் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுவது என்னவென்றால் அவர்கள் கூறினார்கள்: நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பள்ளிவாயிலில் அமர்ந்திருந்தோம். ஒருவர் ஒட்டகத்தில் அமர்ந்தவாறு வந்தார். மேலும் அதை பள்ளிவாயிலி (ன் வராந்தாவி)ல் அமர வைத்தார். பிறகு அதை (கயிற்றால்) கட்டினார். பிறகு உங்களில் முஹம்மது யார்? எனக் கேட்டார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு மத்தியில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தார்கள். நாங்கள், சாய்ந்தவாறு அமர்ந்திருக்கும் வெள்ளை நிறத்திலுள்ள இந்த நபர் என பதில் கூறினோம். அப்போது அவர், அப்துல் முத்தலிபின் மகனே! என அழைத்தார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்; கூறுங்கள்; நான் பதிலளிக்கிறேன் என்றார்கள். அப்போது அவர், நான் உங்களிடம் சில விஷயங்களைக் கேட்க விரும்புகிறேன். மேலும் எனது கேள்வியில் கொஞ்சம் கடுமையை மேற்கொள்வேன்; நீங்கள் என் மீது கொஞ்சமும் கோபங்கொள்ளக் கூடாது என்றார். அதற்கு, நபி (ஸல்) அவர்கள் சரி; உமக்குப் புரிந்தவற்றைக் கேட்பீராக என்றார்கள். அவர் கூறினார்: நான் உங்களிடம் எனது இறைவன் மீது ஆணையாகவும் உங்களுக்கு முன்னர் உள்ள மக்களின் இறைவன் மீது ஆணையாகவும் கேட்கிறேன். (நீங்கள் உண்மை கூறுங்கள்.) அல்லாஹ் தனது தூதை எல்லா மக்களுக்கும் எட்ட வைப்பதற்காக உங்களை அனுப்பியிருக்கிறானா? என்று அவர் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ஆம் (அப்படித்தான் என்பதை) அல்லாஹ் நன்கறிவான் என்று நபி (ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள். நான் உங்களிடம், அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். அல்லாஹ் உங்களுக்கு இரவிலும் பகலிலும் ஐவேளை தொழுகைகளை தொழக் கட்டளையிட்டானா? என்று அவர் கேட்டார். ஆம் (இதுதான் என்பதை ) அல்லாஹ் நன்கறிவான் என்று நபி (ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள். பிறகு அவர், நான் உங்களிடம்,

அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். அல்லாஹ்தான் உங்களுக்கு ஆண்டில் இந்த (ரமலான்) மாதத்தில் நோன்பு வைக்கக் கட்டளை இட்டானா? எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம். (இதுதான் என்பதை) அல்லாஹ் நன்கறிவான் எனக் கூறினார்கள். பிறகு அவர், நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். நமது செல்வந்தர்களிடமிருந்து சதகாவைப் பெற்று நமது ஏழைகளுக்கு விநியோகம் செய்யுமாறு அல்லாஹ்தான் உங்களுக்குக் கட்டளையிட்டானா? எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ஆம். (இதுதான் என்பதை) அல்லாஹ் அறிவான் எனக் கூறினார்கள். அப்போது அவர், நீங்கள் (அல்லாஹ்விடமிருந்து) என்ன (கட்டளைகளை) கொண்டு வந்திருக்கிறீர்களோ அவற்றின் மீது நான் ஈமான் கொள்கிறேன். மேலும் நான், பின்தங்கி விட்ட எனது சமுதாயத்தின் தூதுவராவேன். நான் ஸஃலபாவின் மகன் ளிமாம் ஆவேன். மேலும் பனூ சஅது பின் பக்ரின் சகோதரர்களைச் சேர்ந்தவனாவேன் என்று அவர் கூறினார்.'' *(சஹீஹ் புகாரி . கிதாபுல் இல்ம். பாபு மாஜாஅ ஃபில் இல்ம்)*

மறு பக்கம் ஹதீஸில் இந்த அச்சுறுத்தலும் வந்துள்ளது: اَلْيَمِيْنُ الْفَاجِرَةُ تَدَعُ الدِّيَارَ بَلَاقِعَ பொய்யாக ஆணையிடுவது இருப்பிடங்களை அழித்து நாசமாக்கி விடுகிறது. *(முஸ்னதுஷ் ஷஹாப். பாபுல் யமீன்).* அதாவது பொய்யான ஆணையிடுபவர் இறைவனுடைய அருளிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றார். இன்னும் சொல்வதென்றால், அவனுடைய தண்டனைக்கும் ஆளாகி விடுகின்றார்.

4. ஹிஜ்ரி 14-ஆம் நூற்றாண்டில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கீழ்வருமாறு வாதம் புரிந்தார்கள்:

''i. நான் இறைவன் புறமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி மற்றும் உட்புறமான வெளிப்படையான கருத்து வேறுபாடுகளுக்கு

நீதி தீர்ப்பவனாவேன் என்று எனக்கு இறைவனின் தூய, தூய்மையாக்கப்பட்ட வஹியின் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனக்கு மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் பெயர் வைக்கப்பட்டுள்ளதே இந்த இரு பெயர்களாலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு சிறப்பூட்டியிருக்கிறார்கள். பிறகு இறைவன் தனது நேரடியான உரையாடலினால் எனக்கு இந்த பெயரையே வைத்துள்ளான். மேலும் எனது பெயர் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்பதையே காலத்தின் தற்போதைய நிலையும் எதிர்பார்த்திருந்தது. சுருக்கமாக, எனது இந்த பெயர்களுக்கு மூன்று சாட்சிகள் இருக்கின்றன. நான் அவனிடமிருந்து வந்துள்ளேன் என்றும் அவன் தனது அடையாளங்களினால் எனக்கு சாட்சி பகர்கின்றான் என்றும் வானம் மற்றும் பூமியின் எஜமானனாகிய **எனது இறைவனை சாட்சியாக வைத்து நான் கூறுகிறேன்.''**

*(அர்பயீன் எண்:1 பக்கம் 3. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 345)*

ii.பரேலியைச் சேர்ந்த ஒரு நபர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களிடம், எவரைப் பற்றி இறைவனின் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹதீஸ்களில் செய்தி தெரிவித்தார்களோ அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நீங்கள்தானா? மேலும் இறைவன் மீது ஆணையிட்டு இதற்கு பதில் கூறுங்கள் என எழுதிக் கேட்டார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் ஆணையிட்டு இவ்வாறு எழுதினார்கள்:

''நான் இதற்கு முன்னரும் கீழ்வரும் இந்த வாக்குமூலத்தை எனது நூல்களில் மக்களுக்கு ஆணையிட்டு வெளிப்படுத்தி இருக்கிறேன். இப்போதும் இந்த பிரசுரத்தில், எவனுடைய பிடியில் எனது உயிர் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையிட்டு எழுதுகிறேன். எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றிய செய்தியை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹீஹான ஹதீஸ்களில் தெரிவித்துள்ளார்களோ, அது நானேதான்.

அ(ந்த செய்தியான)து சஹீஹ் புகாரி, சஹீஹ் முஸ்லிம் மற்றும் பிற சஹீஹான நூல்களில் இருக்கின்றது. وَ كَفٰى بِاللّٰهِ شَهِيْدًا (அதாவது சாட்சியாக இருப்பதில் அல்லாஹ் போதுமானவன்.)''

எழுதுபவர் மிர்ஸா குலாம் அஹ்மது அஃபல்லாஹு அன்ஹு வ அய்யித் 17, ஆகஸ்டு 1899 *(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 326 -327. ரூஹானீ கஸாயின் தொகுதி 2)*

வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி சாஹிப் அவர்கள் தமது வாதங்களைப் பற்றி தமது பல்வேறு நூல்களிலும் எழுத்துகளிலும் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறியிருப்பவற்றை (சத்தியங்களை) அஹ்மதிய்யா ஜமாஅத் செகந்திராபாத்தின் தப்லீக் செயலராகிய நமது மதிப்பிற்குரிய நண்பர் பஷீருத்தீன் அல்லாதீன் சாஹிப் அவர்கள் இந்த சிறு நூலில் தொகுத்துள்ளார்கள். நல்ல இயல்புள்ள மக்கள் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களின் வாதங்களை நேர்மையான முறையில் சிந்திக்க வேண்டும் என்ற ஆன்மாவோடும் நம்பிக்கையோடும் அவற்றை தொகுத்திருக்கிறார்கள். மறு பக்கம் அன்னாருக்கு ஆதரவளிப்பதிலும் உதவி செய்வதிலும் அன்னாரின் ஜமாஅத்தின் வெற்றிக்காக இறைவன் அவர்களுடன் நடந்து கொள்ளும் முறை பற்றியும் நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகவும் அன்னாரின் மஸீஹிய்யத் மற்றும் மஹ்தவிய்யத்தின் வாதத்தை ஒப்புக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் மார்க்க தொண்டிற்கான, இஸ்லாத்தைப் பரப்புவதற்கான நற்பேறு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் அவற்றைத் தொகுத்துள்ளார்கள். ஃபஜஸாஹுல்லாஹுத் தஆலா அஹ்ஸனல் ஜஸா. அல்லாஹ் மதிப்பிற்குரிய பஷீருத்தீன் அல்லாதீன் அவர்களின் இந்த முயற்சியை ஒப்புக் கொள்வானாக. மேலும் இதற்கு நல்ல அழகிய விளைவை ஏற்படுத்துவானாக என்று துஆ செய்கிறேன்.

**ஷரீஃப் அஹ்மது அமீனி**
கூடுதல் நாஸிர் தஃவத்தோ தப்லீக்
காதியான்

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

نحمدہ و نصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

لا الٰہ الا اللّٰہ محمد رسول اللّٰہ

சோதிப்பதற்காக எவரும் ஒருபோதும் வரவில்லை
ஒவ்வோர் எதிரியையும் நாம் போட்டிக்கு அழைத்தோம்
(வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரி)

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் (ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்) சார்பாக எல்லா ஆலிம்களையும் ஆணையிட்டுக் கூறுமாறு

# அறைகூவல்

''ஆலிம்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி பல்வேறு தகாத, உண்மைக்குப் புறம்பான கொள்கைகளை வெளிப்படுத்தியவாறு முஸ்லிம்களுக்கு மத்தியில் என்ன தவறான எண்ணங்களை உருவாக்க முயற்சி செய்திருக்கிறார்களோ அதற்கு ஓர் உறுதியான தீர்வுக்காக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் (நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது) அவர்கள் 6, மார்ச் 1987 அன்றைய ஜுமுஆ பேருரையில் கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு என்ன அறிவுரை கூறியிருக்கிறார்கள்? அவர்களுடைய மார்க்கம் எதுவாக இருந்தது? எது அவர்களின் கலிமாவாக இருந்தது?இதை அவர்களின் சொற்களில் கேளுங்கள்:

'' நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். ஏகனும், இணையற்றவனுமாகிய இறைவன் மீது ஈமான் கொள்கிறோம்.''

இந்த நூலிலிருந்து இவர்கள் இன்னொரு விஷயத்தையும் திரித்துக் கூறுகிறார்கள். அதாவது ஷரீஅத் ரத்தாகி விட்டது; (அஹ்மதிகளாகிய) அவர்களின் பார்வையில் இப்போது மிர்ஸா குலாம் அஹ்மதின் கூற்றுகளே அவர்களின் ஷரீஅத் ஆகும். இந்த குழப்பவாதிகளைப் பார்த்து ஆச்சரியம் ஏற்படுகிறது. இவர்களுக்கு இறைவனைப் பற்றிய கொஞ்சமும் அச்சம் இல்லை. எப்படிப்பட்ட பெரும் பொய்யைக் கூறுகின்றனர்! எந்த அளவுக்கு அச்சமின்றி கூறுகின்றனர்!! ஆனால் அவர்கள் கூறுவதுதான் உண்மை என்றால் பிறகு மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அவர்கள் எந்த ஷரீஅத்தை எங்களுக்குக் கூறியிருக்கிறார்களோ அதைக் கேட்டுக் கொள்ளுங்கள்.பிறகு அதையும் ஏற்றுக் கொள்ளுங்கள். எந்த இடத்திலாவது நில்லுங்களேன்! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எங்களுக்கு என்ன போதனை வழங்கி இருக்கிறார்களோ அதன்படியே நம்முடன் இவர்கள் நடந்து கொள்ள விரும்புகின்றனர் என்றால் –அவர்களுக்கு எங்களின் இந்த ஷரீஅத்தை ஏற்றுக் கொள்வதில்தான் விருப்பம் இருக்கிறதென்றால் பிறகு அந்த ஷரீஅத் என்ன என்பதைக் கேட்டுக் கொள்ளுங்கள். அந்த ஷரீஅத் இதுவாகும்: (மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ் ஸலாம் அவர்களின் கூற்று இதுவாகும்)

‘‘ நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம். ஏகனும் இணையில்லாதவனுமாகிய இறைவன் மீது ஈமான் கொள்கிறோம். மேலும் லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை ஏற்றுக் கொள்கிறோம். மேலும் இறைவனின் வேதத்தையும், காத்தமுல் அன்பியாவாகிய ரஸூல் முஹம்மது (ஸல்) அவர்களையும் ஏற்றுக் கொள்கிறோம். மேலும் வானவர்கள், உயிர்த்தெழும் நாள், சுவர்க்கம் நரகம் ஆகியவற்றின் மீது ஈமான் கொள்கிறோம். தொழுகின்றோம். நோன்பு நோற்கின்றோம். கிப்லாவை நோக்குபவர்கள்

ஆவோம். இறைவனும் ரஸூலும் ஹராமாக்கியதை ஹராமாகக் கருதுகிறோம். ஹலாலாக்கியதை ஹலாலாகக் கொள்கிறோம். மேலும் நாங்கள் ஷரீஅத்தில் எதையும் அதிகமாக்குவதுமில்லை; குறைப்பதுமில்லை. கொஞ்சமும் கூட்டுவதோ குறைப்பதோ இல்லை. ரஸூல் (ஸல்) அவர்களிடமிருந்து என்ன எங்களுக்குக் கிடைத்ததோ அதை ஏற்றுக் கொள்கிறோம். அதை நாங்கள் புரிந்தாலும் அல்லது அதன் இரகசியத்தை புரிய முடியாவிட்டாலும் சரியே. அதன் உண்மை வரை எட்ட முடியாவிட்டாலும் சரியே. மேலும் நாங்கள் அல்லாஹ்வின் அருளால் நம்பிக்கை கொண்டவர்கள்; ஓரிறை கொள்கை கொண்டவர்கள்; முஸ்லிம்கள் ஆவோம்.''

*(நூருல் ஹக் முதல் பகுதி. ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 7)*

எனவே இவர்களின் பார்வையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுதான் அஹ்மதி முஸ்லிம்களின் ஷரீஅத் என்றால் பிறகு அந்த ஷரீஅத் (மேலே குறிப்பிட்ட) இந்த ஷரீஅத்துதான். ஆனால் பொய்யிற்கு கால் இல்லை என்பார்கள். அது சில நேரத்தில் ஒரு காலில் நிற்கிறது; சில நேரத்தில் இன்னொரு காலில் நிற்கிறது. நாங்கள் இந்த விஷயத்திலிருந்து விலக மாட்டோம் என்று ஏதாவது ஒரு விஷயத்தை தெளிவான முறையில் ஒப்புக் கொள்ளுங்கள்; உறுதி எடுங்கள்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'' நான் உண்மையாகக் கூறுகிறேன். **மேலும் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.** நானும் எனது ஜமாஅத்தும் முஸ்லிம்களாவோம். ஓர் உண்மையான முஸ்லிம் ஈமான் கொள்ள வேண்டியதைப் போன்றே நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் திருக்குர்ஆன் மீதும் ஈமான் கொள்கிறோம்.''

*(லக்சர் லூதியானா. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 260)*

இப்போது கேள்வி என்னவென்றால், இட்டுக்கட்டிக் கூறப்படும் இந்த குற்றச்சாட்டுகள் அப்படியே தொடர்ந்தால், மேலும் கற்பனைக் கதைகள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுக் கொண்டிருக்குமென்றால், எங்களுக்கு பதில் கொடுப்பதற்கு அனுமதி இல்லை என்றால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நாவிற்கும் ஒரு நாட்டில் தடை விதிக்கப்படுமென்றாலும் எழுதுகோலுக்கும் கட்டுப்பாடு இருக்குமென்றாலும் அவர்கள் தனது ஓசையை எட்ட வைக்க முயற்சி செய்தால் வழியில் பல தடைகள் இருக்கும் என்பதும் கஷ்டங்கள் இருக்கும் என்பதும் அவர்களின் செயற்கையான அசுத்தமும், இட்டுக்கட்டிக் கூறும் அசுத்தமும் எவ்வளவு அதிகமாக பரவுகின்றதோ எங்கெல்லாம் இந்த அசுத்தம் சென்று பரவிக் கொண்டிருக்கிறதோ ஜமாஅத்துக்கு தனது எல்லைக்குட்பட்ட வசதியைக் கொண்டு அந்த எல்லா இடங்கள் வரை தனது மறுப்புரையை எட்ட வைப்பது சாத்தியமில்லை. பிறகு அதற்கு என்ன தீர்வு? ஒரே தீர்வுதான் இருக்கிறது.நான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக அந்த எல்லா ஆலிம்களுக்கும் அவர்கள் பாகிஸ்தானில் வாழ்பவர்களாக இருந்தாலும் அல்லது வெளியே இருப்பவர்களாக இருந்தாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் தூய பெயரின் மீது ஆணையிட்டு, எல்லா முஸ்லிம்களின் கலிமாதான் எனது கலிமா ஆகும் என்றும் எனது ரஸூல் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்றும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு என்ன விஷயங்களின் மீது ஈமான் கொள்வது அவசியமோ அந்த எல்லா விஷயங்களின் மீது எனக்கு ஈமான் இருக்கிறது என்றும் அறிவிப்பு செய்ததைப் போன்று **நான் இந்த அறைகூவலை வைக்கிறேன். எந்த கம்பீரத்துடனும் மகத்துவத்துடனும் அவர்கள் ஆணையிட்டுக்**

**கூறினார்களோ பொய்யர்களின் மீது சாபமிட்டார்களோ** அவ்வாறு இவர்கள் தமது வாதத்தில் உண்மையாளர்கள் என்றால் இந்த ஆணையை எடுத்து வைக்கட்டும். மேலும் **எல்லா ஆலிம்களும் சேர்ந்து பாகிஸ்தானில் சத்தியம் செய்து இந்தக் கூற்றை பாகிஸ்தானில் வெளியிடட்டும்.** வெளி நாடுகளிலும் அதன் மொழியாக்கங்களை வெளியிடட்டும். நாங்கள், அல்லாஹ் பார்த்துக் கொண்டிருப்பவன் என்று அறிந்தவாறும், பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் விழுகிறது என்று உறுதி கொண்டவாறும், நாங்கள் பொய்யர்கள் என்றால் இறைவன் எங்கள் மீது சாபமிடுவானாக எனவும், எங்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் இழிவையும் அவமானத்தையும் ஏற்படுத்துவானாக எனவும் துஆ செய்தவாறு, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கலிமா உண்மையில் வேறொன்றாகும் எனவும், இ(ந்த ஜமாஅத்தான)து கலிமா ஓதும்போது முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் எனக் கூறும்போது அதன் கருத்து மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி ஆவார் எனவும் அவர்களின் ஷரீஅத் வேறொன்றாகும். அவர்களின் இறைவன் வேறொருவன் ஆவான். மேலும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களை இந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட மிகச் சிறந்தவராகக் கருதுகின்றனர்; எல்லா மகத்துவத்திலும் மிகச் சிறப்பானவராகக் கருதுகின்றனர் எனவும் அறிவிக்கின்றோம் என்று **சத்தியமிட்டு வெளியிடட்டும்.**

சுருக்கமாக, இவர்கள் எவ்வளவு இட்டுக்கட்டுகள் கூறுகின்றார்களோ இவர்களிடம் கொஞ்சமாவது தன்மானமும் ஈமானும் இருந்தால் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏற்கனவே சத்தியம் செய்து விட்டார்கள். இவர்களும் வந்து சத்தியம் செய்து விட்டால் பிறகு இறைவனுடைய நியதி என்ன வெளிப்படுத்துகிறது என்று பார்க்கட்டும்.**

தீய துஆ செய்வதை நான் தடுக்கின்றேன். ஆனால்

இந்த மக்கள் எப்படிப்பட்ட அநியாயக்காரர்கள் என்றால், இவர்களிடம் எப்படிப்பட்ட கொடூரம் காணப்படுகிறது என்றால் பொய், இட்டுக்கட்டிக் கூறுதல் ஆகியவற்றில் எந்த அளவுக்கு தைரியம் என்றால் தன்னிடம் ஒரு மறைமுகமான அறைகூவலைக் கொண்டிருக்கின்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறைகூவலை இவர்களிடம் தூக்கி எறிவதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லாமற் போய் விட்டது. உங்களுக்கும் தெரியம் இருக்குமென்றால் உண்மையில் நீங்கள் இறையச்சமுடையவர்கள் என்றால் இறைவன் மீது ஈமான் கொண்டிருக்கிறீர்கள் என்றால் நீங்கள் இந்த மாதிரியான தைரியத்தைக் காட்டுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எத்தகைய கம்பீரத்துடன் அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உறுதி எடுத்தார்களோ ஓர் அறிவிப்பு செய்தார்களோ அதற்குப் போட்டியாக நீங்களும் அப்படிப்பட்ட ஓர் அறிவிப்பை செய்யுங்கள். அதாவது (அஹ்மதிகளாகிய)இவர்கள் பொய்யர்கள்; தீயவர்கள்; துர் நடத்தை கொண்டவர்கள்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிப்பவர்கள்; இஸ்லாம் மார்க்கத்தை விட்டும் விலகி பஹாயிகளைப் போன்று ஒரு புதிய மார்க்கத்தை உருவாக்குபவர்கள். **குற்றம் சாட்டப்பட்ட இந்த எல்லா விஷயங்களின் மீதும் (சத்தியம் செய்து) அறிவிப்பு செய்யுங்கள். இறைவனுடைய விதி என்ன தீர்ப்பு வழங்குகிறது என பிறகு பாருங்கள்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''இறுதியாக நான் பொது மக்களிடம் தெரிவிக்கின்றேன். **நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.** நான் காஃபிர் அல்லன். லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை; முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார்)

என்பது எனது கொள்கையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி, வலாகின் ரஸூலல்லாஹி வ காத்தமன் நபிய்யீன் (ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதரும், நபிமார்களுக்கெல்லாம் முத்திரையும் ஆவார் 33:41) என்பது எனது ஈமான் ஆகும். **எனது இந்த ஈமான் சரியானது என்பதற்கு எந்த அளவுக்கு அல்லாஹ்வின் தூய பெயர்கள் இருக்கின்றனவோ, மேலும் எந்த அளவுக்கு திருக்குர்ஆனின் எழுத்துக்கள் இருக்கின்றனவோ, இறைவனிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மேன்மைகள் உள்ளனவோ அந்த அளவுக்கு நான் ஆணையிட்டுக் கூறுகிறேன்.** எனது எந்த கொள்கையும் இறைவன், இறைதூதரின் கூற்றுக்கு எதிராக இல்லை; எவர் அப்படி கருதுகிறாரோ அது அவரது தவறான எண்ணமாகும். எவர் இப்போதும் என்னை காஃபிர் எனக் கருதுகிறாரோ காஃபிர் எனக் கூறுவதிலிருந்து விலகுவதில்லையோ அவர் மரணத்திற்குப் பிறகு கேள்வி கேட்கப்படுவார் என்பதை நிச்சயமாக நினைவில் வைத்துக் கொள்ளட்டும்.''

*(கராமாத்துஸ் ஸாதிகீன். ரூஹானீ கஸாயின் தொகுதி 7 பக்கம் 67)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த பதிலில் ஓர் ஆற்றல் இருக்கிறது; கம்பீரம் இருக்கிறது. ஆனால் அத்துடன், 'மரணத்திற்குப் பிறகு அவர் கேள்வி கேட்கப்படுவார்' என்ற கருணையின் ஓர் அம்சமும் இருக்கிறது. ஆனால் இந்த மக்கள் எந்த அளவுக்கு அச்சமற்றவர்களாகி விட்டார்கள் என்றால் நாங்கள் பொய்யர்கள் என்றால் இறைவன் இந்த உலகிலும் எங்களைக் கேள்வி கேட்பானாக என்று இவர்கள் இப்போது கூற வேண்டும். எங்களுக்கு இவ்வுலகிலும் கல்மழை பொழியட்டுமாக; வானமும் கல்மழையைப் பொழியட்டுமாக என்று கூறியிருந்தவரின் வழிமுறையில் இவர்கள் செல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

எனவே இந்த அளவுக்கு அச்சமற்ற நிலையை மேற்கொண்டு விட்டபோது பிறகு இன்னும் ஒருபடி மேல் சென்று, இவ்வாறு அறிவிக்கட்டும்: அஹ்மதிகள் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கலிமாவை ஓதவில்லை; மாறாக, மிர்ஸா குலாம் அஹ்மதின் கலிமாவை ஓதுகின்றனர். முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, இன்னொரு மார்க்கத்தை உருவாக்கி இருக்கின்றனர். திருக்குர்ஆனை ஒப்புக்கொள்ளவில்லை; மாறாக, திருக்குர்ஆனுக்கு எதிரான அதை விட்டும் வேறுபட்ட இன்னொரு வேதத்தை அவர்கள் உருவாக்கி இருக்கின்றனர்; இவர்களின் ஷரீஅத் பஹாயிகளைப் போன்று வேறுபட்ட ஷரீஅத் ஆகும்; இவர்களின் இறைவன் வேறுபட்டவனாவான். இவர்களின் ரஸூல் வேறுபட்டவராவார். இவர்களின் இறைதூதர் வேறொருவர். இன்னும் கூறுவதென்றால் மிர்ஸா குலாம் காதியானியை இவர்கள் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட மிக சிறப்பானவராக நம்புகின்றனர். இன்னும் கூறுவதென்றால் அவரை இவர்கள் இறைவனாக நம்புகின்றனர். நவூது பில்லாஹி மின் ஸாலிக். இந்த எல்லா வீண் விஷயங்களும் இந்த நூலிலேயே காணப்படுகின்றன என (அஹ்மதிகளின் எதிரிகளாகிய) இவர்கள் அறிவிக்கட்டும். இதில் நாங்கள் பொய்யர்கள் என்றால் அல்லாஹ் இவ்வுலகிலும் எங்கள் மீது சாபத்தை இறக்குவானாக. எங்களை அழித்து நாசமாக்கி இழிவுக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்குவானாக என அவர்கள் அறிவிக்கட்டும்

இவர்கள் இதை செய்து விட்டால் நான் உறுதி கூறுகிறேன். பிறகு இறைவனின் கோபத்தின் தோற்றம் கண்டிப்பாக வெளிப்படும். இறைவனின் தக்தீர் எவ்வாறு இவர்களை தூள்தூளாக்கிவிடும் என்பதையும் இழிவுக்கும் தோல்விக்கும் ஆளாக்கி விடும் என்பதையும் உங்களின் கண்களுக்கு முன்னால் நீங்கள் காண்பீர்கள். தோல்வி

என்பது எந்நிலையிலும் இவர்களின் விதியில் இருக்கிறது. ஆனால் இறைவன் இவர்களுக்கு நேர்வழி காட்டுவானாக; அல்லாஹ் இவர்களுக்கு கருணை காட்டுவானாக. இவர்கள் தமது தீமைகளிலிருந்து விலகட்டுமாக என்று நாம் வேண்டுகிறோம். இதையே நாம் இறைவனிடம் எதிர்பார்க்கின்றோம். நாம் இதை ஏன் செய்கிறோம் என்றால் நாம் இறைமையை நமது கையில் எடுப்பதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைவனே தடுத்து விட்டான். ஆனால் அவர்களில் யார் தண்டனைக்குரியவர்கள்? அவர்களிளுக்கு மத்தியில் எத்தனை பேர் நல்லியல்பு கொண்டவர்களாக இருந்தனர்? என்பது நமக்குத் தெரியாது. எனவே முழுவதுமாக அப்படி சாபமிட உள்ளம் விரும்புவதில்லை. ஆனால் இப்போது நான் எடுத்துரைப்பதன் பொருள், இவர்களில் யாராவது தைரியம் கொண்டவராக இருப்பாரென்றால் அவரே முன்னால் வரட்டும்; நாங்கள் சாபமிடமாட்டோம். அவர்களே முன் வந்து தமது வாதத்திற்கு ஆதரவாக தம் மீது பொய்யர் என்றால் சாபமிடட்டும். அவர்களுக்கு இதற்கான தைரியம் இருக்கிறதென்றால் வரட்டும்; இறைவனின் நியதி எவ்வாறு அவர்களை இழிவுக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கிக் காட்டுகிறது என்பதைப் பாருங்கள். *(ஜுமுஆ பேருரை 6.3.1987 லிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்)*

*இறைவன் மீது ஆணையாக! இப்னு மர்யம் இறந்து விட்டார்*
*அந்த கண்ணியத்திற்குரியவர் சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார்*

*(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரி)*

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

نحمدہ و نصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

இறைவனின் அருளுடனும் கருணையுடனும்
**அவன் உதவியாளனாவான்**

# ஆயினயே கமாலாத்தே இஸ்லாம்
# ஆணையிடுவதன் நோக்கம்

''ஆணையிடுவது தொடர்பாக நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் ஜல்ல ஷானஹுவின் ஆணைகளை மனிதர்களின் ஆணைகளைப் போன்று அனுமானிப்பது வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அனுமானமாகும். இறைவன் அல்லாஹ் அல்லாதவற்றின் மீது மனிதன் ஆணையிடுவதைத் தடுத்துள்ளான் என்றால் அதற்குக் காரணம், மனிதன் ஆணையிடும்போது அதன் குறிக்கோள், எதை அவர் ஆணையிட்டுக் கூறியிருக்கிறாரோ அதை அவர் ஒரு கண்கண்ட சாட்சிக்கு பிரதிநிதியாக நியமிக்கிறார் என்றால், அதுவே தனது சொந்த ஞானத்தால் அவருடைய கூற்றை உண்மைப்படுத்தவோ அல்லது பொய்ப்படுத்தவோ முடியும். ஏனெனில் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்றால் ஆணையிடுவதன் உண்மையான குறிக்கோள் சாட்சியேயாகும். மனிதன் சாதாரண சாட்சிகளை எடுத்து வைக்க இயலாமற் போய்விடும்போது பிறகு ஆணையிட வேண்டிய தேவை ஏற்படுகிறது. கண்கண்ட சாட்சியத்தினால் பெற விரும்பும் அந்த பயனை அவர் அதிலிருந்து பெற வேண்டும். ஆனால் இறைவனைத் தவிர வேறொருவரும் பார்க்கக் கூடியவனாகவும் ஆஜராக இருக்கக் கூடியவனாகவும் இருக்கிறான் எனவும் உண்மைப்படுத்தக் கூடியவனும் பொய்ப்படுத்தக் கூடியவனும் தண்டிக்கக் கூடியவனும் அல்லது வேறு

ஏதாவது விஷயத்தில் ஆற்றல் பெற்றவன் எனவும் குறிப்பிடுவதும் அத்தகைய கொள்கையை கொண்டிருப்பதும் தெளிவான குஃப்ர் (இறைமறுப்பு) ஆகும். எனவே அல்லாஹ் அல்லாதவற்றின் மீது ஒருபோதும் ஆணையிட்டுக் கூறக் கூடாது என்றே எல்லா வேதங்களிலும் மனிதனுக்கு போதிக்கப்பட்டுள்ளது.

இப்போது இறைவன் ஆணையிட்டுக் கூறுவதை மனிதனுடைய ஆணைகளுடன் அனுமானித்துக் கூறுவது சரியன்று என்பது தெளிவானதாகும். ஏனெனில் மனிதனுக்கு ஆணையிட்டுக் கூறும்போது ஏற்படும் கஷ்டத்தைப் போன்று இறைவனுக்கு எந்தக் கஷ்டமும் ஏற்படுவதில்லை. மாறாக, அவன் ஆணையிடுவது வேறுபட்டதாகும். அது அவனுடைய மகத்துவத்துக்கு தகுந்ததும், அவனுடைய இயற்கைச் சட்டத்திற்கு ஏற்புடையதும் ஆகும்.''

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் பக்கம் 95, 96ன் அடிக்குறிப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 95,96)*

''உனது ஏகத்துவத்தின் மீது ஆணையாக! நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே என் மனதைக் கவர்ந்தவர். அவர்கள் மீதுள்ள அன்பில் நாம் நம்மையே மறந்தோம்.''

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் பக்கம் 225 ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 225)*

''وَاللّٰہِ اِنِّی قَدْ رَأَیْتُ جَمَالَہٗ
بِعُیُوْنِ جِسْمِیْ قَاعِدًا بِمَکَانِیْ

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது வீட்டில் அமர்ந்தபடி எனது பௌதீகமான கண்களினால் தங்களின் அழகைக் கண்டிருக்கிறேன்.

*(ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் பக்கம் 593 ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 593)*

## ஹகீகத்துல் வஹீ

''இந்த உம்மத்தில் சிலர் தோன்றுவார்கள். அவர்களுக்கு யூதர்கள் என பெயர் வைக்கப்படும். அவ்வாறே இந்த உம்மத்திலிருந்தே ஒருவர் தோன்றுவார். அவருக்கு ஈஸா என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் பெயர் வைக்கப்படும். ஹஸ்ரத் ஈஸாவை வானத்திலிருந்து இறக்க வேண்டியதற்கும் அவருடைய சுதந்திரமான நபித்துவத்தின் ஆடையைக் கழற்றி அவரை உம்மத்தியாக்குவதற்கும் தேவை என்ன? இந்த நடவடிக்கை தண்டனையாக இருக்கும்; ஏனெனில் அவருடைய சமுதாயம் அவரை இறைவனாக்கி இருந்தது எனக் கூறுவீர்கள் என்றால், அந்த பதிலும் முட்டாள்தனமானதாகும். ஏனெனில் இதில் ஈஸாவின் மீது என்ன குற்றம் இருக்கிறது?

நான் இந்த விஷயத்தை எந்தவோர் அனுமானத்துடனும், கற்பனையாகவும் கூறவில்லை. மாறாக, நான் இறைவனிடமிருந்து வஹியைப் பெற்றுக் கூறுகிறேன். **அவனே எனக்கு இந்தத் தகவலைத் தந்தான் என நான் அவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.** காலம் எனக்கு சாட்சி பகர்கிறது; இறைவனின் அடையாளங்கள் எனக்கு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன.''

*(ஹகீகத்துல் வஹீ பக்கம் 32,33 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 33)*

''எனது காலத்திலேயே ரமலான் மாதத்தில் சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்பட்டன. எனது காலத்திலேயே திருக்குர்ஆன், சஹீஹான ஹதீஸுகள் மற்றும் முந்தைய வேதங்களுக்கேற்ப நாட்டில் பிளேக் நோய் வந்தது. மேலும் எனது காலத்திலேயே புதிய வாகனம் அதாவது தொடர் வண்டி தோன்றியது. எனது காலத்திலேயே எனது

முன்னறிவிப்புகளுக்கேற்ப பயங்கரமான பூகம்பங்கள் ஏற்பட்டன. பிறகு என்னை பொய்ப்படுத்துவதில் தைரியம் காட்டாமல் இருப்பது இறையச்சத்திற்கு ஏற்ற செயல் இல்லையா?

பாருங்கள். **நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.** எனது உண்மைக்கு ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன; இன்னும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன; இனிமேலும் வெளிப்படுக் கொண்டிருக்கும். இது மனிதனின் திட்டமாக இருந்திருப்பின் இந்த அளவுக்கு ஆதரவும் உதவியும் இதற்கு ஒருபோதும் கிடைத்திருக்காது. ஆயிரக்கணக்கான அடையாளங்கள் நிறைவேறியிருக்கும்போது, மக்களை ஏமாற்றுவதற்காக வெறும் ஒன்றிரண்டு விஷயத்தை முன்னால் எடுத்து வைத்து இன்னின்ன முன்னறிவிப்புகள் நிறைவேறவில்லை எனக் கூறுவது நீதிக்கும் ஈமானுக்கும் எதிரான விஷயமாகும். அறிவிலிகளே! அறிவுக் குருடர்களே!! நீதியையும் நேர்மையையும் விட்டு விலகியிருப்பவர்களே!!! ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகளிலிருந்து ஒன்று அல்லது இரண்டு முன்னறிவிப்பு நிறைவேறியது உங்களுக்குப் புரியவில்லை என்றால் இந்த சாக்குப் போக்கினால் நீங்கள் இறைவனுக்கு✱ முன்னால் குற்றவாளியில்லாமல் ஆகிவிடுவீர்களா? பாவமன்னிப்பு தேடுங்கள். இறைவனின் நாள் அருகில் இருக்கிறது. பூமியை உலுக்கிவிடும் அந்த அடையாளங்கள் வெளிப்படவிருக்கின்றன. *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 45,46 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 48)*

✱**அடிக்குறிப்பு:** இன்றைய நாள் வரை எனக்கு ஆதரவாக வெளிப்பட்ட இறைவனின் அடையாளங்களை எண்ணிப் பார்த்தால் அவை 3 இலட்சங்களை விட அதிகமானவையாக இருக்கும். பிறகு இந்த அளவுக்கு இருக்கும் அடையாளங்களில் ஒன்றிரண்டு

அடையாளங்கள் எதிரியின் பார்வையில் சந்தேகத்திற்குரியவையாக இருக்கின்றனவென்றால் அவை பற்றி கூச்சலிடுவதும், இந்த அளவு அடையாளங்களினால் பயன் பெறாததும் ஆகிய இதுதான் இந்த மக்களின் இறையச்சமா? நபிமார்களின் முன்னறிவிப்புகளில் (ஒன்றிரண்டு முன்னறிவிப்புகள் மக்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறாத) இதற்கான முன்மாதிரி காணப்படவில்லையா என்ன?''

---

''இப்போது நான் وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ *(உமது இறைவனின் பேரருளை பறைசாற்றுவீராக 93:12)* என்பதற்கேற்ப என்னைப் பற்றிக் கூறுகிறேன். இறைவன் என்னை அந்த மூன்றாவது படித்தரத்தில் நுழையச் செய்து அந்த அருட்கொடையை வழங்கியுள்ளான். அது எனது முயற்சினால் அல்ல; மாறாக தாயின் வயிற்றிலேயே எனக்கு வழங்கப்பட்டுள்ளது. எனக்கு ஆதரவாக அவன் இன்றைய தேதியாகிய 16 ஜூலை 1906-லிருந்து எத்தகைய அடையாளங்களைக் காட்டியுள்ளான் என்றால் அவற்றை நான் ஒவ்வொன்றாக எண்ணினால், **அவை 3 இலட்சத்தை விட அதிகமானவையாகும் என நான் இறைவன் மீது ஆணையிடுக் கூற முடியும்.** எவராவது நான் ஆணையிட்டுக் கூறுவதை நம்பவில்லை என்றால் நான் அவருக்கு சான்றைக் காட்ட முடியும்.'' *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 67 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 70)*

பிளேக் நோயின் நாட்களில் காதியானில் பிளேக் கடுமையாக இருந்தபோது எனது மகன் ஷரீஃப் அஹ்மது நோயுற்றான். கடுமையான காய்ச்சல், எரித்து விடும் அளவுக்கு தோன்றியது. அதனால் சிறுவன் முற்றிலும் மயக்கமடைந்து விட்டான். மயக்கத்தில் இரு கைகளையும் அடித்துக் கொண்டிருந்தான். மனிதனுக்கு மரணத்திலிருந்து விடுதலை இல்லைதான்; ஆனால்

பிளேக் நோய் கடுமையாக இருக்கும் இந்த நாளில் மகன் இறந்து விட்டால் எல்லா எதிரிகளும் இந்த காய்ச்சலை பிளேக் நோய் எனக் குறிப்பிடுவார்களே! انّی احافظ کلّ من فی الدار *(அதாவது உமது வீட்டில் உள்ள அனைவரையும் நான் பாதுகாப்பேன்)* என்று இறைவன் கூறிய அவனுடைய அந்தத் தூய வஹியைப் பொய்யப்படுத்துவார்களே என நான் கருதினேன். இந்த சிந்தனையினால் எனது உள்ளத்தில் எந்த அளவுக்கு துக்கம் ஏற்பட்டதென்றால் அதை நான் எடுத்துரைக்க முடியாது. அநேகமாக இரவு 12 மணி இருக்கும். மகனின் நிலை மிக மோசமானபோது எனது உள்ளத்தில், இது சாதாரணமான காய்ச்சல் இல்லை; இது வெறொரு சோதனையாகும் என்ற அச்சம் ஏற்பட்டது. எனது உள்ளத்தின் நிலை எப்படி இருந்தது என்பதைப் பற்றி நான் என்ன கூறுவது? மகன் இறந்து விட்டால் அநீதி இயல்பைக் கொண்ட மக்களுக்கு உண்மையை மறைப்பதற்கு பல வழிவகைகள் கையில் கிடைத்து விடும். அல்லாஹ் காப்பானாக. இந்த நிலைமைலேயே நான் ஒளு செய்தேன்; தொழுகைக்காக நின்று விட்டேன். நின்ற உடனேயே துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் மிகத் தெளிவான ஓர் அடையாளமாகிய அந்த நிலை எனக்கு கிடைத்து விட்டது. **எந்த இறைவன் பிடியில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையிட்டு நான் கூறுகிறேன்.** அப்போது நான் மூன்று ரக்அத் தொழுதிருப்பேன். எனக்கு கஷ்ஃப் நிலை உருவாகத் தொடங்கி விட்டது. நான் கஷ்ஃப் காட்சியில் கண்டது என்னவென்றால், மகன் முற்றிலும் உடல் நலம் பெற்று விட்டான். அப்போது அந்த கஷ்ஃப் நிலை சென்று விட்டது. மகன் உணர்வு வந்து கட்டிலில் அமர்ந்திருக்கக் கண்டேன். மேலும் தண்ணீர் கேட்கிறான். நான் நான்கு ரக்அத்தை முழுமை செய்து விட்டேன். உடனே அவனுக்கு தண்ணீர் கொடுத்தேன். மேலும் கையால் உடலைத் தொட்டுப் பார்த்தபோது காய்ச்சலின்

அடையாளமே இல்லை.'' *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 85,86-ன் எஞ்சிய அடிக்குறிப்பு ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 87,88)*

''21. இருபத்தி ஒன்றாவது அடையாளம்: அநேகமாக 30 ஆண்டு காலம் ஆகியிருக்கும். எனது தந்தை - அல்லாஹ் அவர்களுக்கு அளவில்லா கருணை புரிவானாக-அவர்கள் தமது கடைசி வயதில் நோயுற்றார்கள். எந்த நாளில் அவர்களுக்கு இறப்பு நியமிக்கப்பட்டிருந்ததோ அந்த நாளின் நண்பகலில் وَالسّماءِوَالطّارق என எனக்கு இல்ஹாம் வந்தது. அத்துடன் இது அவருடைய மரணத்தைச் சுட்டிக் காட்டுகிறது என உள்ளத்தில் போடப்பட்டது. இதன் பொருள், வானத்தின் மீது ஆணையாக! சூரியன் மறைந்த பிறகு ஏற்படும் அந்த விபத்தின் மீது ஆணையாக! இது இறைவன் புறமிருந்து தனது அடியானுக்கு வருத்தம் தெரிவிப்பதாக இருந்தது. அப்போது நான், எனது தந்தை சூரியன் மறைந்த பிறகு மரணித்து விடுவார்கள் எனப் புரிந்து கொண்டேன். மேலும் பலருக்கு இந்த இறையறிவிப்பு பற்றிய செய்தி தெரிவிக்கப்பட்டது. **எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் இருக்கிறதோ, எவன் மீது பொய் கூறுவது ஒரு ஷய்த்தான் மற்றும் சாபத்திற்குரியவனின் வேலையோ அவன் மீது ஆணையாக! அப்படியே நடந்தது.**'' *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 209. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 218)*

அப்போது மயக்க நிலை ஏற்பட்டு اليس الله بكافٍ عبدهٗ என்ற இன்னோர் இல்ஹாம் வந்தது. அதாவது அல்லாஹ் தனது அடியானுக்குப் போதுமானவன் இல்லையா? கடுமையான வேதனையுள்ள ஒரு காயம் ஒரு மருந்தினால் ஒரு நொடிப்பொழுதில் சரியாகி விடுவதைப் போன்று இந்த இறையறிவிப்பினால் உள்ளம் உறுதியாகி விட்டது. இறையறிவிப்பில் உள்ளத்திற்கு ஆறுதல் கூறுவதற்காக ஒரு தனிப்பட்ட சிறப்புத்தன்மை இருக்கிறது என்பது உண்மையில் பலமுறை சோதிக்கப்பட்டுள்ளது. மேலும்

இந்த சிறப்புத்தன்மையின் வேர் இறையறிவிப்பின் மீது இருக்கும் நம்பகத்தன்மையாகும். அந்தோ! தமக்கு இல்ஹாம் இறங்குவதாக வாதம் செய்தபோதிலும், நமது இந்த இல்ஹாம் யூகங்களாகும்; இவை ஷய்த்தானிய இல்ஹாம்களா? அல்லது ரஹ்மானின் இல்ஹாம்களா என்பது எங்களுக்குத் தெரியாது என்று கூறுபவர்களின் இல்ஹாம்கள் எப்படிப்படைவை?அப்படிப்பட்ட இல்ஹாம்களின் தீங்கு அவற்றின் நன்மையை விட அதிகமானதாகும். **ஆனால் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்: நான் இந்த இல்ஹாம்களின் மீது திருக்குர்ஆன் மீதும், இறைவனின் மற்ற வேதங்களின் மீதும் ஈமான் கொள்வதைப் போன்று ஈமான் கொள்கிறேன்.** மேலும் நான் திருக்குர்ஆனை உறுதியாகவும் திடமாகவும் இறைவனின் கூற்று என நம்புவதைப் போன்றே எனக்கு இறங்கும் கூற்றையும் இறைவனின் கூற்று என உறுதி கொள்கிறேன்.'' *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 210,211 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 219,220)*

''105. நூற்றி ஐந்தாவது அடையாளம்: ஒருமுறை எனது சகோதரர் மர்ஹூம் மிர்ஸா குலாம் காதிர் சாஹிப் அவர்களைப் பற்றி, அவர்களின் வாழ்விற்கு கொஞ்ச நாட்களே எஞ்சியுள்ளன; அது அதிகபட்சமாக 15 நட்கள் ஆகும் என எனக்கு கனவில் காட்டப்பட்டது. பிறகு அவர் ஒருமுறை கடும் நோயுற்றார். எதுவரையென்றால் வெறும் எலும்பு மட்டுமே எஞ்சியிருந்தது. எந்த அளவுக்கு மெலிந்து விட்டார்கள் என்றால், கட்டிலில் அமர்ந்திருந்தாலும் ஒருவர் அதில் உட்கார்ந்திருக்கிறாரா அல்லது வெறும் கட்டில் இருக்கிறதா? என்பது தெரியாதிருந்தது. சிறுநீர், மலம் ஆகியவை கட்டிலிலேயே வெளியேறின. மேலும் மயக்கமான நிலை இருந்து வந்தது. எனது தந்தை மர்ஹூம் மீர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் பெரிய திறமை வாய்ந்த மருத்துவராக இருந்தார்கள். அவர்கள், இப்போது

இவருடைய இந்த நிலை கைவிடப்பட்டதும் நம்பிக்கையிழந்து விட்டதுமான நிலையாகும். சில நாட்கள்தான் எஞ்சியிருக்கின்றன எனக் கூறி விட்டார்கள். அப்போது என்னிடம் இளமையின் ஆற்றல் இருந்தது. கடும் முயற்சியின் வலிமை இருந்தது. மேலும் எனது இயல்பு எப்படிப்பட்டதென்றால், இறைவன் எல்லாவற்றின் மீது ஆற்றல் மிக்கவனாவான்; உண்மையில் அவனுடைய ஆற்றல்களின் எல்லையைப் பற்றி யார் அறிய முடியும்? அவனுடைய வாக்குறுதிக்கு எதிரானது அல்லது அவனுடைய தூய மகத்துவத்திற்கு எதிரானதும் அவனுடைய ஓரிறைதன்மைக்கு எதிரானதுமான விஷயங்களைத் தவிர அவனுக்கு முன்னால் எதுவும் சாத்தியமற்றது என்றில்லை என்று நான் நம்புகிறேன். எனவே நான் இந்த நிலைமையிலும் அவருக்காக துஆ செய்ய ஆரம்பித்து விட்டேன். மேலும் **நான் இந்த துஆவில் மூன்று விஷயங்களில் எனது இறைஞானத்தை அதிகமாக்க விரும்புகிறேன் என என் உள்ளத்தில் உறுதி எடுத்துக் கொண்டேன். ஒன்று,** கண்ணியத்திற்குரிய இறைவனின் முன்னால் எனது துஆ ஒப்புக்கொள்ளப்படும் அளவுக்கு நான் தகுதி உடையவன்தானா என நான் பார்க்க விரும்புகிறேன். **இரண்டாவது,** எச்சரிக்கைக்காக வரும் இல்ஹாம்கள், கனவுகளுக்கு காலதாமதமும் ஏற்படலாமா? முடியாதா? **மூன்றாவது,** ஒருவருடைய எலும்பு மட்டும் எஞ்சியிருக்கின்ற இப்படிப்பட்ட நோயாளி துஆவின் மூலமாக சரியாக முடியுமா? முடியாதா? என்பதாகும்.

சுருக்கமாக, நான் இந்த அடிப்படையில் துஆ செய்ய ஆரம்பித்தேன். **எனவே எவன் கையில் என் உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக!** துஆவுடனேயே மாற்றம் ஏற்பட ஆரம்பித்து விட்டது. மேலும் இதற்கிடையில் நான் இன்னொரு கனவில் அவர்கள் அதாவது (மிர்ஸா குலாம் காதிர் சாஹிப்) தனது வராந்தாவில் தனது கால்களில் நடந்து கொண்டிருப்பதாகக் கண்டேன்.

ஆனால் அவரது நிலை எப்படி இருந்தென்றால், அவரை இன்னொரு நபர்தான் திருப்பிப் படுக்க வைக்க வேண்டியதிருந்தது. துஆ செய்தவாறு 15 நாட்கள் சென்றதும் அவர்களிடம் உடல் நலத்தின் ஒரு வெளிப்படையான அடையாளம் உருவாகத் தொடங்கியது. நான் கொஞ்ச அடி எடுத்து வைத்து நடக்க வேண்டும் என என் உள்ளம் விரும்புகிறது என்ற தமது ஆசையை அவர் வெளிப்படுத்தினார். எனவே அவர்கள் ஓரளவுக்கு ஆதரவுடன் எழுந்தார்.மேலும் கைத்தடியின் ஆதரவுடன் நடக்க ஆரம்பித்தார்.பிறகு கைத்தடியை எடுப்பதையும் விட்டு விட்டார். சில நாள்களில் முழுமையாக உடல் நலம் பெற்று விட்டார். அதற்குப் பிறகு அவர் 15 ஆண்டுகள் உயிருடன் வாழ்ந்தார்; அதற்குப் பிறகே மரணித்தார்.'' *(ஹகீகத்துல் வஹ்ஈ பக்கம் 253,254 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 265,266)*

''135-ஆவது அடையாளம்: ஏறக்குறைய 20 ஆண்டுகளாக என்னைப் பீடித்திருக்கின்ற நீரிழிவு நோயின் காரணமாக ஒருமுறை கண் பார்வை பற்றி மிகவும் அச்சம் ஏற்பட்டது. ஏனெனில் அப்படிப்பட்ட நோய்களில் கண்களிலிருந்து அடிக்கடி கண்ணீர் வடியும் கடும் அபாயம் இருப்பதுண்டு.அப்போது இறைவன் தனது அருளாலும் கருணையாலும் தனது இந்த வஹியின் மூலமாக ஆறுதலையும், மன சாந்தியையும், நிம்மதியையும் வழங்கினான். அந்த வஹி இதுவாகும்: نزلت الرحمة علٰى ثلٰث۔ العين وعلى الاُخريين அதாவது, மூன்று உறுப்புகளின் மீது கருணை இறக்கப்பட்டுள்ளது. ஒன்று கண்கள். மேலும் இரண்டு உறுப்புகள். அவற்றிக்கு விளக்கம் தரப்படவில்லை. **மேலும் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்:** 15, 20 வயதில் எனது கண் பார்வை எப்படி இருந்ததோ அப்படியே இன்று ஏறக்குறைய 70 ஆண்டுகள் வரை ஆகிவிட்ட பிறகும் கூட அதே கண்

பார்வை இருக்கிறது. ஆக, இது இறைவனின் வஹியில் வாக்குறுதி வழங்கப்பட்டிருந்த அதே கருணைதான்.'' *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 306 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 319)*

138-ஆவது அடையாளம்: இறைவனுடைய அடியார்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதை அடையாளம் கண்டு கொள்வதற்கு துஆ ஒப்புக்கொள்ளப்படுவதும் ஒரு பெரிய அடையாளமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இன்னும் கூறுவதாயின், துஆ ஒப்புக்கொள்ளப்படுவதைப் போன்று வேறு எந்த அடையாளமும் இல்லை.ஏனெனில் ஓர் அடியாருக்கு இறை சன்னிதியில் மதிப்பும் கண்ணியமும் இருக்கிறது என்பது துஆ ஒப்புக்கொள்ளப்படுவதிலிருந்து நிரூபணமாகின்றது. துஆ ஒப்புக்கொள்ளப்படுவது எல்லா இடத்திலும் கட்டாயமானதல்ல; சில நேரத்தில் இறைவன் தனது விருப்பத்தையும் மேற்கொள்கிறான். என்றாலும் கண்ணியத்திற்குரிய இறைவனிடம் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களுக்கு இதுவும் ஓர் அடையாளமாகும் என்பதில் சந்தேகமில்லை. அதாவது, மற்றவர்களை விட அவர்களின் துஆக்கள் அதிகமாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன. மேலும் துஆ ஒப்புக்கொள்ளப்படுவதில் எவரும் அவர்களுடன் போட்டி போட முடியாது. **எனது ஆயிரக்கணக்கான துஆக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. நான் அவை அனைத்தையும் எழுதினால் ஒரு மிகப் பெரிய நூலாகி விடும் என நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூற முடியும்.**'' *(ஹகீகத்துல் வஹீ-உண்மைக்கான அடையாளம், பக்கம் 321 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 334)*

**''எந்த இறைவனின் பிடியில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அவனே என்னை அனுப்பினான். அவனே எனக்கு நபி எனப் பெயர் வைத்தான். மேலும் அவனே என்னை**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயரால் அழைத்தான்.** அவனே என்னை உண்மைப்படுத்துவதற்காக மாபெரும் அடையாளங்களை வெளிப்படுத்தினான். அவை மூன்று இலட்சங்களை எட்டுகின்றன. அவற்றிலிருந்து முன்மாதிரிக்காக ஓரளவுக்கு இந்த நூலிலும் எழுதப்பட்டுள்ளன.'' *(ஹகீகத்துல் வஹீ நிறைவுப் பகுதி பக்கம் 68 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 503)*

## ''அமெரிக்காவைச் சேர்ந்த பொய் நபி டாக்டர் ஜான் அலக்ஸாண்டர் டூயி எனது முன்னறிவிப்பிற்கேற்ப மரண மடைந்தான்''

அடையாளம் 196: தலைப்பில் கூறப்பட்ட இந்த நபர் இஸ்லாத்தின் கடும் எதிரியாக இருந்தான். அது மட்டுமின்றி இவர் பொய்யான நபித்துவ வாதத்தை செய்தான். மேலும் சய்யிதுந் நபிய்யீன் (நபிமார்களின் தலைவர்), அஸ்தகுஸ் ஸாதிகீன் (உண்மையாளர்களிலெல்லாம் பெரும் உண்மையாளர்), கைருல் முர்ஸலீன் (தூதர்களிலெல்லாம் சிறந்தவர்), இமாமுத் தய்யிபீன் (தூயவர்களுக்கெல்லாம் தலைவர்) ஆகிய புனிதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை பொய்யர் என்றும், இட்டுக்கட்டிக் கூறுபவர் என்றும் கருதி வந்தான். மேலும் தனது அசுத்தத்தன்மையினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அசுத்தமாக வசைமாறி பொழிந்து வந்தான். தீய வார்த்தைகளால் அன்னாரை ஏசி வந்தான். சுருக்கமாக, உறுதியான மார்க்க(மாகிய இஸ்லா)த்தின் மீது கொண்ட வெறுப்பின் காரணமாக அவனிடம் கடுமையான தீய பண்புகள் காணப்பட்டன. எவ்வாறு பன்றிகளுக்கு முன்னால் முத்துக்களுக்கு எந்த மதிப்பும் இருப்பதில்லையோ அவ்வாறே அவன் இஸ்லத்தின் ஓரிறை கொள்கையை மிகவும் ஏளனப் பார்வையுடன் பார்த்து

வந்தான். மேலும் அதை அழிக்க விரும்பினான். மேலும் ஹஸ்ரத் ஈஸாவை இறைவன் எனக் கருதினான். முக்கடவுக் கொள்கையை முழு உலகிலும் பரப்புவதில் எந்த அளவுக்கு ஆவேசம் கொண்டிருந்தான் என்றால், நான் பல பாதிரிகளின் நூற்றுக்கணக்கான நூல்களைப் படித்திருக்கிறேன். ஆயினும் இப்படிப்பட்ட ஆவேசத்தை நான் வேறு யாரிடத்திலும் பார்க்கவில்லை.'' *(ஹகீகத்துல் வஹீ நிறைவுப் பகுதி பக்கம் 69 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 504,505)*

''எனது உண்மையான பணி சிலுவையை முறிப்பதாகும். எனவே (அலெக்ஸாண்டர் டூயி ஆகிய) அவன் மரணித்ததால் சிலுவையின் ஒரு பெரும் பகுதி முறிந்து விட்டது. ஏனெனில் அவன் முழு உலகிலும் சிலுவைக்கு உதவியாளராக முதலிடத்தில் இருந்தான். அவன் இறைதூதர் என்று வாதித்து வந்தான்.தனது துஆவினால் எல்லா முஸ்லிம்களும் அழிந்து விடுவார்கள்; இஸ்லாம் நாசமாகி விடும்; கஅபத்துல்லாஹ் நாசமாகி விடும் எனக் கூறி வந்தான். எனவே இறைவன் என் கையினால் அவனை நாசமாக்கினான். அவனுடைய மரணத்தினால் பன்றியைக் கொல்லுதல் என்ற முன்னறிவிப்பு மிகத் தெளிவாக நிறைவேறி விட்டது என நான் அறிவேன். ஏனெனில் எவர் பொய்யான முறையில் இறைதூதர் என வாதம் செய்தாரோ - பன்றியைப் போன்று பொய் எனும் அசுத்தத்தைத் தின்றாரோ அவரை விட அபாயமானவர் வேறு யார் இருக்க முடியும்? அவனே குறிப்பிட்டிருப்பதைப் போன்று அவனுடன் ஏறக்குறைய ஒரு இலட்சம் செல்வந்தர்கள் இருந்தனர். இன்னும் கூறுவதென்றால், இவனுக்கு முன்னால் முஸைலமா கஸ்ஸாப், அஸ்வது அன்ஸி ஆகியோர் ஒன்றுமே இல்லை; இவனைப் போன்று அவர்களுக்கு புகழ் இருந்ததில்லை; இவனைப் போன்று கோடிக்கணக்கான ரூபாய்க்கு

எஜமானராக அவர்கள் இருந்ததில்லை. **எனவே எவரை கொல்லுவது பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கையினால் கொல்லப்படுவார் என செய்தி தெரிவித்திருந்தார்களோ அந்தப் பன்றி இவன்தான் என நான் ஆணையிட்டுக் கூற முடியும்.''** *(ஹகீகத்துல் வஹீ நிறைவுப் பகுதி பக்கம் 77 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 513)*

## மூன்றாம் முறையாக மூவாயிரம் ரூபாய் பரிசுக்கான அறைகூவல் பிரசுரம்

ஆத்தம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''அவர் பொதுக்கூட்டத்தில் நாம் இருக்கும் நேரத்தில் தெளிவான சொற்களில், தான் முன்னறிவிப்புக்கான காலகட்டத்தில் இஸ்லாத்தின் பக்கம் கொஞ்சமும் திரும்பவில்லை என்றும், இஸ்லாத்தின் உண்மையும் மகத்துவமும் தனது உள்ளத்தில் எந்த பயங்கரமான விளைவையும் ஏற்படுத்தவில்லை என்றும் இஸ்லாமிய முன்னறிவிப்பின் ஆன்மீக திகில் அணுவளவும் தனது உள்ளத்தை ஆட்கொள்ளவில்லை; மாறாக, மஸீஹின் இறைதன்மையின் மீதும், அவர் இறைவனின் மகனாவார் என்பதிலும் மற்றும் பாவ மீட்புக் கொள்கையிலும் முழுமையாக உறுதி கொண்டிருந்தேன் என்றும் நான் சம்பவத்திற்கு மாற்றமாகக் கூறுகிறேன் என்றால், உண்மையை மறைக்கிறேன் என்றால் ஆற்றல் மிக்க இறைவனே! பொய்யர்களின் மீது இறங்க வேண்டிய மரணம் எனும் தண்டனையால் என்னை ஓராண்டிற்குள் நாசமாக்குவாயாக என அவர் ஆணையிட்டுக் கூறட்டும். இந்த ஆணையிடுதலைத்தான் நாம் அவரிடம் கேட்கிறோம். அதற்காக நாம் பிரசுரங்களை வெளியிட்டு

வெளியிட்டு இன்று 3000 வரை எட்டி விட்டன. **நாம் ஆணையிட்டுக் கூறுகிறோம்.** நாம் முறைப்படி எழுதி வாங்கி அதாவது 9, செப்டம்பர் 1894-ஆம் தேதிய பிரசுரத்தின் நிபந்தனைகளுக்கேற்ப எழுதி வாங்கி, அவர் ஆணையிட்டுக் கூறுவதற்கு முன் மூவாயிரம் ரூபாயைக் கொடுத்து விடுவோம். பின்னர் ஆணையிடக் கூறுவோம்........... இப்போது அவர் ஆணையிடுவதற்காக களத்திற்கு வருவார் என எவருக்காவது நம்பிக்கை இருக்கிறதா? ஒருபோதும் வரமாட்டார்; ஒருபோதும் வரமாட்டார்.அவர் பொய் என்னும் மரணத்தால் மரணமடைந்து விட்டார்; இப்போது கல்லறையிலிருந்து அவர் எப்படி வெளிவருவார்?''

*(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 2 பக்கம் 67-68 அஷ்ஷிர்கத்துல் இஸ்லாமிய்யா ரப்வாவில் அச்சிடப்பட்டது)*

## இறை தோற்றங்கள்

''திருக்குர்ஆன், ஹதீஸ் கல்வியைப் படித்து புதைத்துவிட்ட நமக்கு எதிரான மவ்லவிகளுக்கு எச்சரிக்கையைக் கொண்ட முன்னறிவிப்புக்கும் வாக்குறுதியைக் கொண்ட முன்னறிவிப்பும் இடையிலான வித்தியாசம் என்ன? என்பது இப்போது வரை தெரியவில்லை.....ஆத்தமின் சம்பவத்திற்குப் பிறகு லேக்ராமைப் பற்றி செய்யப்பட்ட முன்னறிவிப்புடன் எந்த நிபந்தனையும் இருக்கவில்லை. அதில் தெளிவாக காலமும் எப்படி மரணிப்பார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அது எவ்வளவு தெளிவாக நிறைவேறியது என்பதைப் பற்றியே இவர்கள் சிந்தித்திருக்கலாம். ஆனால் காழ்ப்புணர்ச்சியினால் உள்ளம் குருடாகி விட்ட பிறகு யார் சிந்திப்பார்? உள்ளங்களில் அணுவளவாவது நீதி இருக்குமென்றால் மிகவும் எளிதான ஒரு வழி அவர்களுக்கு கிடைத்திருந்தது. அதாவது, எந்த முன்னறிவிப்புகள் நிறைவேறவில்லை என அவர்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதோ அவற்றை எழுதி, அவை எந்த அளவுக்கு

இருக்கின்றன என எனக்கு முன்னால் எடுத்து வைத்திருக்கலாம்; பிறகு நிறைவேறிய முன்னறிவிப்புகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதற்கான சான்றை என்னிடம் கேட்டிருக்கலாம். இந்த சோதனையின் மூலமாக அவர்களின் எல்லா திரைகளும் விலகி இருக்கும். **ஒன்றிரண்டு எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்புகள்தான் அவர்களிடம் ஆட்சேபணைக்கு உரியவையாக இருக்கின்றன என நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அவற்றுடன் நிபந்தனையும் இருந்தது.** (எவர்களைப் பற்றி எச்சரித்து அந்த முன்னறிவிப்புகள் தெரிவிக்கப்பட்டனவோ அவர்கள்) பயந்ததனால், அச்சப்பட்டதனால் அவை பிற்படுத்தப்பட்டன. அவற்றைப் பற்றி இறைவனின் தொன்மையான சட்டம் என்னவென்றால், கழிவிரக்கம் கொள்வதால், பாவமன்னிப்புக் கேட்பதால், தான தருமங்கள் கொடுப்பதால், துஆ செய்வதால் அவை நீங்கி விடுகின்றன.'' *(தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 17-19. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 406-408)*

''அறிவற்ற எனது எதிரிகளுக்கு இறைவன் பல்வேறு விதமான அடையாளங்களைக் காட்டுவதன் மூலம் நாளுக்கு நாள் அவர்களை இழிவுக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் உரையாடியதைப் போன்று பிறகு இஸ்ஹாக் (அலை) அவர்களுடன், இஸ்மாயீல் (அலை), யஃகூப் (அலை), யூசுஃப் (அலை), மூஸா (அலை), மர்யமின் மகன் ஈஸா (அலை), மேலும் அனைவருக்கும் பிறகு நமது நபி (ஸல்) அவர்களிடம் உரையாடினான்; அன்னாருக்கு அனைவரையும் விட அதிக ஒளிமயமான, தூய வஹியை இறக்கினான். **அவ்வாறே எனக்கும் தனது உரையாடலின் சிறப்பினை வழங்கினான் என நான் அவன் மீதே ஆணையிட்டுக் கூறுகிறேன்.** ஆனால் இந்தச் சிறப்பு எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்

பின்பற்றியதனால் மட்டுமே கிடைத்தது. நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவனாக இல்லாவிட்டால், அன்னாரைப் பின்பற்றாவிட்டால் எனது செயல்கள் உலகத்திலுள்ள அனைத்து மலைகளுக்கு சமமாக இருந்தாலும் நான் இந்த உரையாடலின் சிறப்பை ஒருபோதும் பெற்றிருக்க மாட்டேன். ஏனெனில் இப்போது முஹம்மதிய்ய நுபுவ்வத்தைத் தவிர எல்லா நுபுவ்வத்துகளும் அடைக்கப்பட்டு விட்டன. ஷரீஅத்துடைய நபி எவரும் வர முடியாது. ஷரீஅத் அல்லாமல் நபி ஆகலாம்; ஆனால் அவர் முதலில் இந்த உம்மத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.'' *(தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 24-25. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 411-412)*

## சிராஜே முனீர்

''நமது உள்ளம் இப்போது வியப்பிற்குரிய நிலையில் உள்ளது. வேதனையும் உள்ளது; மகிழ்ச்சியும் உள்ளது. வேதனை ஏன் என்றால், லேக்ராம் மனந்திரும்பியிருந்தால் அதிகமாக இல்லாவிட்டாலும் தீய வார்த்தைகளைக் கூறுவதிலிருந்து விலகியிருந்தால் **அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் அவருக்காக துஆ செய்திருப்பேன். மேலும் அவர் துண்டு துண்டாக ஆக்கப்பட்டிருந்தாலும் அப்போதும் அவர் உயிர் பெற்றிருப்பார் என்று நான் நம்பியிருந்தேன்.** எந்த இறைவனை நான் அறிவேனோ அவனுக்கு எந்த விஷயமும் சத்தியமற்றதாக இல்லை. மேலும் மகிழ்ச்சி ஏன் என்றால், முன்னறிவிப்பு மிகவும் தெளிவாக நிறைவேறியது.'' *(சிராஜே முனீர் பக்கம் 24 ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 28)*

''பராஹீனே அஹ்மதிய்யாவின் 238,239 ஆகிய பக்கங்களில் எழுதப்பட்டிருக்கும் 12-ஆவது முன்னறிவிப்பு குர்ஆனின் ஞானத்தைப் பற்றியது ஆகும். இந்த முன்னறிவிப்பின் சுருக்கம் என்னவென்றால், உமக்கு

குர்ஆனின்ஞானம் வழங்கப்படும் என அல்லாஹ் கூறுகிறான். எப்படிப்பட்ட ஞானம் என்றால் அது பொய்யை அழித்து விடும். மேலும் அந்த முன்னறிவிப்பிலேயே இரண்டு மனிதர்களுக்கு அருள் வழங்கப்படும் எனக் கூறினான். ஒன்று முஅல்லிம் (கற்றுக் கொடுப்பவர்). அவர் பெயர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள்; இன்னொருவர் இந்த முதஅல்லிம் (கற்றுக் கொள்பவர்). அதாவது இந்த நூலை எழுதுபவன். மேலும் இது وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறும் அந்த வசனத்தையும் சுட்டிக்காட்டுகிறது.(62:4) அதாவது, அந்த நபிக்கு வேறு மாணவர்களும் இருக்கின்றனர். அவர்கள் இன்னும் தோன்றவில்லை.மேலும் இறுதி காலத்தில் அவர்களின் தோற்றம் நிகழும். இந்த வசனம் இந்த எளியவனையே சுட்டிக் காட்டுகிறது. ஏனெனில் இப்போது இல்ஹாமில் குறிப்பிட்டதைப் போன்று இந்த எளியவன் ஆன்மீகமான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாணவர்களைச் சேர்ந்தவனாவேன். திருக்குர்ஆனின் போதனையின் பக்கம் சுட்டிக்காட்டுகின்ற இந்த முன்னறிவிப்பை உண்மைப்படுத்துவதற்காகவே கராமாத்துஸ் ஸாதிகீன் என்ற நூல் எழுதப்பட்டிருந்தது. இதன் பக்கம் எந்த எதிரியும் கவனம் செலுத்தவில்லை. **என் உயிர் எவன் கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! திருக்குர்ஆனின் உண்மைகளையும் ஞானங்களையும் புரிவதில் எல்லா ஆன்மாவை விடவும் எனக்கு மேன்மை வழங்கப்பட்டுள்ளது.** நான் அவர்களை பலமுறை அழைத்ததற்கேற்ப எதிரியாக இருக்கும் எந்த மல்லவியாவது போட்டிக்கு வந்தால் இறைவன் அவரை இழிவுக்கும் வெட்கத்திற்கும் ஆளாக்கி விடுவான். எனவே எனக்கு வழங்கபட்டுள்ள திருக்குர்ஆனைப் பற்றிய ஞானம் அல்லாஹ் ஜல்ல ஷானஹுவின் ஓர் அடையாளமாகும்.'' *(சிராஜே முனீர் பக்கம் 34-35 ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 40-41)*

பராஹீனே அஹ்மதிய்யாவின் 227-ஆம் பக்கத்தில் ஓர் ஆரியரைப் பற்றி ஒரு முன்னறிவிப்பு இருக்கிறது. அவருடைய பெயர் மலாவாமல் ஆகும். இவர் இப்போது வரை உயிருடன் இருக்கிறார். அவர் காச நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். ஒருநாள் அவர் என்னிடம் வந்து, தனது வாழ்வை விட்டும் நம்பிக்கையிழந்து மிகவும் நிம்மதியிழந்தவாறு அழுதார். அவருக்கு அச்சுறுத்தும் கனவுகளும் வந்தன என எனக்கு நினைவிருக்கிறது. எனக்கு நினைவிருக்கின்றவரை கனவு என்னவென்றால், அவரை ஒரு விஷப் பாம்பு கடித்து விட்டது. மேலும் உடல் முழுவதும் விஷம் பரவி விட்டது. இந்தக் கனவு அவரை மிகவும் கவலைக்குரியவராக்கி விட்டது. உணவு சாப்பிட்ட பிறகு அதிகமாகி விடும் ஒரு சாதாரண காய்ச்சல் முன்னரே அவரை பதற்றமடைய வைத்திருந்தது. எனவே அவர் நிம்மதியிழந்தவாறு, அநேகமாக (வாழ்க்கையிலிருந்து) நம்பிக்கையிழந்த நிலையில் இருந்தார். அவர் என்னிடம் வந்து அழுதார். எனவே எனது உள்ளம் அவரது நிலைமையினால் மென்மையானது. நான் இதற்கு முன்னர் ஷரம்பத் என்ற பெயருடைய ஓர் ஆரியருக்காக ஓரிறைவனிடம் துஆ செய்ததைப் போன்று இந்த ஆரியருக்காகவும் துஆ செய்தேன். அப்போது எனக்கு இந்த இல்ஹாம் இறங்கியது. அது பராஹீனே அஹ்மதிய்யாவின் 227-ஆம் பக்கத்தில் காணப்படுகிறது. அதாவது, قُلْنَا يَا نَارُ كُونِي بَرْدًا وَسَلَامًا அதாவது நாம் காய்ச்சல் எனும் நெருப்புக்குக் கூறினோம்: குளிர்ச்சியாகவும் சாந்தியாகவும் ஆவாயாக. அப்போது அவர் அங்கே இருக்கும்போதே இந்த இல்ஹாம் பற்றி அவருக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. மேலும் அவர் கண்டிப்பாக எனது துஆவின் பரக்கத்தினால் நலம் பெறுவார் என வேறு பல மக்களுக்கும் இது பற்றி தெரிவிக்கப்பட்டது. அதன்படி ஒரு வாரம் கூட கழிந்திருக்காது. அந்த ஆரியர் இறைவன் அருளால் உடல் நலம் பெற்று விட்டார்........**இந்த சம்பவம் முற்றிலும்**

**சரியானது எனவும் இதில் கொஞ்சமும் மிகைப்படுத்துதலின் கலப்படம் இல்லை எனவும் நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.** *(சிராஜே முனீர் பக்கம் 60 ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 62)*

நாம் நீதிக்கண் கொண்டு பார்க்கும்போது எல்லா நுபுவ்வத் தொடரிலும் உயர்தரமான வீரம் மிக்க நபியாகவும் உயிருள்ள நபியாகவும் இறைவனின் உயர்தரமான அன்பிற்குரிய நபியாகவும் ஓர் ஆண் மகனையே அறிகின்றோம். அதாவது அவரே நபிமார்களின் தலைவரும், இறைதூதர்களுக்கு பெருமைக்குரியவரும், எல்லா ரஸூல்மார்களுக்கும் கிரீடமும் ஆவார். அவரது பெயர் முஹம்மது முஸ்தஃபா மற்றும் அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகும். அவர்களின் நிழலின் கீழ் 10 நாட்கள் செல்வதால் இதற்கு முன் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் கிடைக்க முடியாதிருந்த அந்த ஒளி கிடைக்கிறது. அந்த வேதங்கள் எப்படிப்பட்டன? நாம் அவற்றைப் பின்பற்றினாலும் நம்மை அவை மறுக்கப்பட்டவர்களாகவும், கைவிடப்பட்டவர்களாகவும், கருமை உள்ளம் கொண்டவர்களாகவும் ஆக்க விரும்புகிறது. எவற்றின் நிழலினால் நாமே மரணித்தவர்களாக ஆகி விடுகின்றோமோ அவற்றை உயிருள்ள நுபுவ்வத் எனக் கூற வேண்டுமா? இவையெல்லாம் இறந்தவையாகும் என உறுதியாகக் கருதுங்கள். இறந்தவருக்கு இறந்தவர் ஒளி தரமுடியுமா? இயேசுவை வணங்குவது ஒரு சிலையை வணங்குவதே ஆகும். **எவன் கையில் என் உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! (இயேசுவாகிய) அவர் என் காலத்தில் இருந்தால் அவருக்கு பணிவுடன் எனக்கு சாட்சி கூற வேண்டியே வந்திருக்கும்.** எவர் அதை ஏற்றுக் கொண்டாலும் அல்லது ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரியே. ஆனால் உண்மை என்னவென்றால், உண்மையில் அருள் இருக்கிறது. இறுதியில் அதன் ஒளி உலகின் மீது விழுகிறது.''

*(சிராஜே முனீர் பக்கம் 72-73 . ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 82)*

## பரகாத்துத் துஆ

''இப்போது நான் அல்லாஹ்வுக்காக எனது சொந்த சாட்சியை (சர்)சய்யிது (அஹ்மது கான்) சாஹிப் அவர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறேன். ஒருவேளை அல்லாஹ் அவர் மீது அருள் புரியலாம். எனவே அன்பிற்குரிய சய்யிது சாஹிப் அவர்களே! **அல்லாஹ் ஜல்ல ஷானஹூவின் ஆணையாக! சூரியக் கதிர் சுவரின் மீது விழுவது போன்று வஹீ வானத்திலிருந்து உள்ளத்தில் விழுகிறது என்பது உண்மையிலேயே சரியானதாகும்.** இறைவனின் உரையாடலுக்கான நேரம் வரும்போது முதலில் ஒருமுறை என் மீது ஒரு மயக்கம் ஏற்படுகிறது. அப்போது நான் மாற்றப்பட்ட ஒன்றைப் போன்று ஆகிவிடுகிறேன். மேலும் எனது உணர்வும், புலனும் எஞ்சியிருக்கிறது என்றபோதிலும் அந்த நேரத்தில் ஒரு கடுமையான ஆற்றல் என்னை முழுவதும் தனது உள்ளங்கையில் எடுத்துக் கொண்டது போன்று உணர்கின்றேன். அந்த நேரத்தில் எனது இருப்பின் எல்லா நரம்புகளும் அவனுடைய கையில் இருப்பதாகவும் எனக்குரியதெல்லாம் இப்போது எனக்குரியதல்ல; மாறாக அவனுக்குரியதாகும் என உணர்கிறேன்.''

*(பரகாத்துத் துஆ பக்கம் 18 எஞ்சிய அடிக்குறிப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 6பக்கம் 22)*

''இறுதியாக நான் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அறிவுரையாகக் கூறுகிறேன். இஸ்லாத்திற்காக விழித்தெழுங்கள். இஸ்லாம் கடுமையான சோதனையில் ஆழ்ந்திருக்கிறது. அதற்கு உதவி செய்யுங்கள். இப்போது அது ஏழ்மையாக இருக்கிறது. மேலும் நான் இதற்காகவே வந்துள்ளேன். மேலும் எனக்கு இறைவன் திருக்குர்ஆனின் ஞானத்தை வழங்கியுள்ளான். தனது வேதத்தின் உண்மைகளையும் தத்துவங்களையும் எனக்குத் திறந்து கொடுத்திருக்கின்றான். மேலும் எனக்கு வழக்கத்திற்கு அப்பாற்பட்டவற்றை வழங்கியிருக்கிறான். எனவே

நீங்களும் இந்த அருட்கொடையிலிருந்து பங்கு பெறும் பொருட்டு என் பக்கம் வாருங்கள். **எவன் கையில் என் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன்.** இப்படிப்பட்ட மிகப் பெரும் குழப்பங்களைக் கொண்ட நூற்றாண்டின் துவக்கத்தில் -அதன் மிகத் தெளிவான ஆபத்துகள் இருக்கும்போது ஒரு முஜத்திது (சீர்திருத்தவாதி) மிகத் தெளிவான வாதத்துடன் வருவது அவசியமில்லையா? எனவே எனது பணிகளின் மூலமாக கூடிய விரைவில் நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொள்வீர்கள்.'' *(பரகாத்துத் துஆ பக்கம் 31 ரூஹானீ கஸாயின் தொகுதி 6பக்கம் 36)*

## தாஃஃபிவுல் பலா

**''மவ்லவி அஹ்மது ஹஸன் இந்தப் பிரசுரத்தை ஆணையிட்டு வெளியிட்ட பிறகு அவரால் அம்ரூஹாவை (நகரத்தை) பிளேக் நோயிலிருந்து காப்பாற்ற முடிந்தால் மேலும் குறைந்த பட்சம் மூன்று குளிர்காலம் அமைதியாக கழிந்து விட்டால் நான் இறைவன் புறமிருந்து வந்தவனல்லன். எனவே இதை விடப் பெரிய வேறு என்ன தீர்ப்பு இருக்க முடியும்? நானும் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அதாவது, நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன்; நபிமார்கள் வாக்குறுதி வழங்கிய அவனேயாவேன்.** மேலும் என்னைப் பற்றியும் எனது காலத்தைப் பற்றியும் திருக்குர்ஆனிலும், தவ்ராத்திலும், இஞ்சீலிலும் செய்தி இருக்கிறது. அந்த காலத்தில் சூரிய சந்திர கிரகணம் ஏற்படும் என்றும், பூமியில் கடுமையான பிளேக் நோய் உருவாகும் என்றும் காணப்படுகிறது. மேலும் இதுவே எனது அடையாளமாகும்.'' *(தாஃஃபிவுல் பலா வ மிஃஃயாரு அஹ்லில் இஸ்தஃஃபா, தாவூன் என்ற தலைப்பில் பக்கம் 18, ரூஹானீ கஸாயின் தொகுதி 19. பக்கம் 238)*

## சனாத்தன் தர்ம்

''நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்: உண்மை விஷயம் என்னவென்றால், இறைவனின் கூற்றைப் புரிந்து கொள்வதற்கு முதலில் உள்ளத்தை மன ஆவேசத்திலிருந்து தூய்மையாக்க வேண்டும். அப்போதுதான் இறைவன் புறமிருந்து உள்ளத்தில் ஒளி இறங்கும். உட்புறமான ஒளி இல்லாமல் உண்மை தென்படுவதில்லை. لَايَمَسُّهُ إِلَّاالْمُطَهَّرُونَ அதாவது இது தூய்மையான கூற்றாகும் என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுவதைப் போன்று ஒருவர் தூய்மையடையாத வரை அவர் அதன் இரகசியங்கள் வரை சென்றடைய முடியாது.'' *(சனாதன் தர்ம் பக்கம் 6 ரூஹானீ கஸாயின் தொகுதி 18பக்கம் 473,474)*

## அர்பயீன் நூலின் அடிக்குறிப்பு

''அறிவுப்பூர்வமான அடையாளத்தின் போட்டியில் அறிவற்ற மக்கள் கோல்டவிய்யாவைச் சேர்ந்த பீர் மஹர் அலி ஷாவைப் பற்றி அவர் வெற்றியடைந்து விட்டதாக அநீதியாக பொய்யான தம்பட்டம் அடித்து விட்டனர் என்பது வருத்தத்திற்குரியதாகும். மேலும் என்னை அசுத்தமான வார்த்தைகளால ஏசினர். என்னை அவருக்கு எதிரில் அறிவற்றவனாகவும், முட்டாளாகவும் குறிப்பிட்டனர். நான் சரியான நேரத்தில் மதிப்புள்ள முத்தின் திகில் உணர்வின் கீழ் வந்து பயந்து விட்டேனாம். மற்றபடி அந்த ஹஸ்ரத் உண்மையான உள்ளத்துடன் போட்டியாக அரபி தஃப்ஸீர் எழுதுவதற்கு ஆயத்தமாகி விட்டிருந்தாராம். மேலும் இந்த எண்ணத்துடன் லாஹூருக்கு வருகை தந்திருந்தாராம். ஆனால் நான் அவருடைய மகத்துவத்தின் கம்பீரத்தையும் அறிவின் கம்பீரத்தையும் கண்டு வெருண்டோடி விட்டேனாம். வானமே! பொய்யர்களின் மீது சாபமிடுவாயாக. ஆமீன். அன்பிற்குரிய வாசகர்களே! பொய்யரை அவமானப்படுத்துவதற்காக அந்த

நேரத்திலேயே அதாவது 7 டிசம்பர் 1900 வெள்ளிக் கிழமை இறைவன் எனது உள்ளத்தில் ஒரு விஷயத்தை இட்டான். நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அவனுடைய நரகம் பொய்யர்களுக்காக கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. நான் கடுமையான பொய்ப்படுத்தலைக் கண்டு நானாகவே வழக்கத்திற்கு அப்பாற்பட்ட இந்த போட்டிக்கு விண்ணப்பித்திருந்தேன். பீர் மஹர் அலி ஷாஹ் சாஹிப் எனது நோக்கம் முற்றிலும் ஒன்றுமற்றதாக ஆகும் வகையில் எழுத்துப்பூர்வமான விவாதம் மற்றும் அத்துடன் பைஅத்தின் நிபந்தனையையும் வைக்காமல் இருந்திருந்தால் லாஹூரிலும் காதியானிலும் பனி மலை இருந்தாலும் குளிர்காலம் இருந்தாலும் அப்போதும் நான் லாஹூர் சென்றடந்திருப்பேன். வானத்தின் அடையாளம் என்பது இதற்குக் கூறுகிறோம் என்பதை அவருக்குக் காட்டியிருப்பேன்.'' *(அர்பயீன் அடிக்குறிப்பு எண் 4 பக்கம் 17-18 ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 448-449)*

## அன்ஜாமே ஆத்தம் நூலின் பிற்சேர்க்கை

''இறைவன் என்னை இட்டுக்கட்டிக் கூறுபவர்களைப் போன்று அழிவுக்குள்ளாகவில்லை. இது இறையச்சம் கொண்ட ஒரு மனிதருக்குப் போதுமானதாகும். மாறாக, அவன் வெளிப்படையாகவும் உட்புறமாகவும் எனது உடல், ஆன்மா ஆகியவற்றின் மீது எத்தகைய அருள் புரிந்திருக்கிறான் என்றால், அவற்றை நான் கணக்கிட முடியாது. நான் இளைஞனாக இருந்தேன்; இறைவனின் வஹி இல்ஹாம் எனக்கு வருகிறது என்று வாதம் செய்தேன். இப்போது நான் முதியவனாகி விட்டேன். ஆரம்ப வாதம் செய்து 20 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் ஆகி விட்டது. என்னை விட சிறியவர்களாக இருந்த என்னுடைய பல நண்பர்கள், அன்பர்கள் மரணித்து விட்டனர். மேலும் அவன் எனக்கு நீண்ட ஆயுளை வழங்கி இருக்கிறான். அவன் என்னைக் காப்பாற்றுபவனாகவும்

பாதுகாப்பவனாகவும் இருந்தான். எவர்கள் இறைவன் மீது இட்டுக்கட்டிக் கூறுகின்றார்களோ அவர்களுக்கு இந்த அடையாளங்கள்தான் இருக்கின்றனவா? இப்போதும் மவ்லவிகள் என்னை இட்டுக்கட்டிக் கூறுபவர் எனக் கருதுகின்றனர் என்றால் இதை விட அதிகமாக இன்னொரு தீர்ப்பு இருக்கிறது. அது என்னவென்றால், நான் வெளியிட்டுள்ள அந்த இலஹாம்களை கையில் எடுத்து மவ்லவி சாஹிப்களுடன் முபாஹலா செய்கிறேன்.

இவ்வாறு நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்: உண்மையில் நான் அவனுடைய உரையாடலினால் சிறப்பிக்கப்பட்டுள்ளேன். மேலும் இஸ்லாத்திற்கு எதிரான மிகப் பெரிய குழப்பமாக இருக்கும் அந்த குழப்பத்தை நீக்குவதற்காக உண்மையில் அவன் என்னை 14-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பியுள்ளான். மேலும் அவனே எனக்கு ஈஸா எனப் பெயர் வைத்தான். மேலும் சிலுவையை முறிப்பதற்காக என்னை நியமித்தான். ஆனால் எந்த பௌதீகமான போரினாலும் அல்ல.'' *(அஞ்சாமே ஆத்தம் பக்கம் 50-51 ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 50-51)*

''எனவே இது இறைவனுடைய அருளும் இறைவனுடைய கருணையுமாகும். எதிரிகள் எந்தத் துன்பங்களில் சிக்கியிருக்கிறர்களோ அவற்றிலிருந்து அவன் நம்மைக் காப்பாற்றியிருக்கிறான். ஏகனும் இணையில்லாதவனுமாகிய அந்த இறைவன் மீது நான் ஆணையிட்டுக் கூறுகிறேன்: முபாஹலாவுக்கு முன்னரும் அவன் நமக்குப் பாதுகாவலனாக இருந்திருக்கின்றான் என்றாலும் முபாஹலாவுக்குப் பிறகு எத்தகைய சில ஆன்மீக பௌதீக அருள்கள் இறங்கி இருக்கின்றனவென்றால் முன்னுள்ள வாழ்க்கையில் இவற்றிற்கு நிகரானதை நான் காணவில்லை.'' *(அஞ்சாமே ஆத்தம் என்ற நூலின் பிற்சேர்க்கை பக்கம் 30 ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 314)*

‘‘ஆறாவது, இந்த விஷயங்களில் எதுவும் அவர்கள் செய்யவில்லையென்றால், என்னுடனும் எனது ஜமாஅத்துடனும் ஏழு ஆண்டுகள் வரை இவ்வாறு சமாதானம் செய்து கொள்ளுங்கள்: காஃபிர் எனக் கூறுவது, பொய்ப்படுத்துவது, தீயதாகப் பேசுவது ஆகியவற்றிலிருந்து வாயை மூடுங்கள். ஒவ்வொருவரையும் நல்லொழுக்கத்துடனும், அன்புடனும் சந்தியுங்கள். மேலும் இறைதண்டனைக்கு பயந்து சந்திக்கும்போது முஸ்லிம்களுடன் பழகுவதைப் போன்று நடந்து கொள்ளுங்கள். எல்லாவிதமான விஷமத்தனத்தையும், அசுத்ததையும் விட்டு விடுங்கள். எனவே இந்த 7 ஆண்டுகளில் இறைவனின் ஆதரவினால் என் சார்பாக இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதில் பெரும் தாக்கம் ஏற்படவில்லை என்றால் மஸீஹின் கையினால் பொய்யான மார்க்கங்கள் மரணித்துப் போவது அவசியமாக இருப்பதைப் போன்று என் மூலமாக அந்த மரணம் பொய்யான மார்க்கங்களுக்கு வரவில்லை என்றால் அதாவது இறைவன் என் மூலமாக இஸ்லாத்தின் கொள்கையை ஓங்கச் செய்து அதனால் எல்லாப் புறமிருந்தும் மக்கள் இஸ்லாத்தில் நுழைய ஆரம்பிக்கும் அந்த அடையாளத்தை வெளிப்படுத்தவில்லை என்றால் கிறித்தவத்தின் பொய்யான கடவுள் மரணிக்கவில்லை என்றால் உலகம் வேறொரு நிலைக்கு வராதிருந்தால் **நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்: நான் என்னை பொய்யன் எனக் கருதிக் கொள்வேன்; ஆனால் நான் ஒருபோதும் பொய்யன் அல்லன் என்பதை இறைவன் அறிவான்.’’** *(அஞ்சாமே ஆத்தம் பிற்சேர்க்கை பக்கம் 27 -35 ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 311 -319)*

‘‘எனவே தமது விஷமத்தினத்தினாலும் அசுத்தத்தினாலும் குஃப்ர் ஃபத்வா கொடுப்பதிலும், வசைமாறிபொழிவதிலும் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அப்துல் ஹக் கஸ்னவி மற்றும் அப்துல்

ஜப்பார் ஆகியோர் தமது காலம் சென்று போன சான்றோர்களின் சொற்களைப் பற்றி கண்டிப்பாக ஆய்வு செய்யட்டும். (சான்றோர்களாகிய) அவர்களின் வலியுறுத்திக் கூறிய அறிவுரைக்கு கட்டுப்பாடாமல் அவர்களுக்குக் கீழ்ப்படியாதவர்களாகவும் ஆகிவிடாதிருப்பதற்காக அவ்வாறு செய்யட்டும். இந்த பெரிய மவ்லவி அப்துல்லாஹ் தமது வாழ்வின் காலகட்டத்தில் எனது பெயரிலும் இரண்டு கடிதங்களை எழுதியிருந்தார். மேலும் அந்தக் கடிதங்களில், நீங்கள் காஃபிர்களின் மீது வெற்றி பெறுவீர்கள் என திருக்குர்ஆனின் வசனங்களைக் கொண்ட இறையறிவிப்புடன் எனக்கு நற்செய்தி வழங்கினார். பின்னர் மரணமடைந்த பிறகு நான் உங்கள் வாதத்தை உண்மைப்படுத்துபவனாவேன் என எனக்கு வெளிப்படுத்திக் காட்டியிருந்தார். நான் அல்லாஹ் ஜல்ல ஷானஹூவின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்: அவர்கள் எனது வாதத்தைக் கேட்டு அதனை உண்மைப்படுத்தினார்கள். மேலும் 'நான் உலகில் இருந்தபோது அப்படிப்பட்ட ஒருவர் இறைவன் புறமிருந்து தோன்றுவார் என நான் உறுதி கொண்டிருந்தேன்' என தெளிவான சொற்களில் என்னிடம் கூறினார். இது அவர்களுடைய சொற்களாகும். ولعنةالله على الكاذبين *(அஞ்சாமே ஆத்தம் பிற்சேர்க்கை பக்கம் 59 ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 343)*

## ஆஸ்மானீ ஃபைஸ்லா என்ற நூல்

''மியான் நஸீர் ஹுஸைன் இறையச்சம் மற்றும் நேர்மையின் வழியை முற்றிலும் கைவிட்டு விட்டார் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள். நான் தில்லியில் மூன்று பிரசுரங்களை வெளியிட்டேன். மேலும் எனது பிரசுரத்தில், நான் முஸ்லிம் ஆவேன்; நான் இஸ்லாத்தின் கொள்கையைக் கொண்டிருக்கிறேன் என

பலமுறை வெளிப்படுத்தினேன். இன்னும் கூறுவதென்றால், இஸ்லாத்தின் கொள்கைக்கு மாற்றமான எந்தவொரு விஷயமும் எனது எழுத்துக்களிலோ அல்லது சொற்பொழிவிலோ இல்லை. நவூது பில்லாஹ். இது ஆட்சேபணை செய்பவர்களின் தவறான எண்ணமேயாகும். மற்றபடி **நான் இஸ்லாத்தின் அனைத்து கொள்கைகளிலும் உள்ளத்தாலும் உயிராலும் ஈமான் கொள்கிறேன்; இஸ்லாத்திற்கு எதிரான கொள்கையை வெறுக்கின்றேன் என நான் அல்லாஹ் ஜல்ல ஷானஹூவின் மீது ஆணையிட்டு தூதை எட்ட வைத்தேன்.**'' *(ஆஸ்மானீ ஃபைஸ்லா பக்கம் 3 ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 312)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன் மீது குஃப்ர் ஃபத்வா கொடுத்த எல்லா சூஃபிகளையும், பீர்மார்களையும், பெரியார்களையும், ஆலிம்களையும் போட்டிக்கு அழைத்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்:

''நான் உறுதி கூறுகிறேன். மேலும் **அல்லாஹ் ஜல்ல ஷானஹூவின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்:** நான் இந்தப் போட்டியில் தோல்வியடைந்து விட்டால் நான் உண்மையில் இல்லை என நானே ஒப்புதல் வாக்குமூலம் வெளியிட்டு விடுவேன்.......மேலும் அந்த மாநாட்டிலேயே, நான் இறைவன் புறமிருந்து வந்தவன் அல்லன் எனவும், எனது எல்லா வாதங்களும் பொய்யானவை எனவும் ஒப்புக் கொண்டு விடுவேன். ஆனால் **இறைவன் மீது ஆணையாக!** என் இறைவன் ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டான்; அவன் ஒருபோதும் என்னை வீணாக்க மாட்டான் என நான் உறுதி கொள்கிறேன்; மற்றும் கண்டு கொண்டிருக்கிறேன்.'' *(ஆஸ்மானீ ஃபைஸ்லா பக்கம் 13 ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 330)*

## ஹமாமத்துல் புஷ்ரா

”وإن إمامى سيد الرسل أحمدُ

நிச்சயமாக எனது இமாம் எனது தலைவர் எல்லா இறைதூதர்களின் தலைவராகிய அஹ்மது ஆவார்.

رضيناه متبوعا وربّى ينظُرُ

நான் அவர்களுக்கு கட்டுப்படுவதில் திருப்தி கொண்டுள்ளேன். என் இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

ووالله إنى قد تبِعتُ محمّدًا

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவனாவேன்.

وفى كل آن مِن سناه أُنَوَّرُ

மேலும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவர்களிடமிருந்து ஒளியைப் பெறுகிறேன்

*(ஹமாமத்துல் புஷ்ரா பக்கம் 106-107 ரூஹானீ கஸாயின் தொகுதி 7 பக்கம் 331-332)*

## சுர்மா சஷ்மயே ஆர்யா

‘‘நாம் உண்மையாகவே கூறுகிறோம். அதிகமாக பேசுவதில் விஷயங்களில் நேரத்தை இழக்க விரும்பவில்லை. திருக்குர்ஆனின் 10 பக்கங்களில் ஓரிறை கொள்கை பற்றி உலகத்திற்கு ஒளியூட்டும் சூரியனைப் போன்று என்ன வெளியாகின்றதோ அதை ஒருவர் வேதத்தின் 1000 பக்கங்களிலிருந்து எடுத்துக் காட்டினாலும், வேதத்தில் ஓரிறை கொள்கை இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம். எவர் விரும்புகிறாரோ அவர், தகுதிக்கேற்ப நம்மிடம் நிபந்தனைகளை நியமித்துக் கொண்டாலும் சரியே. நாம் ஆணையிட்டுக் கூறுகிறோம். நியமிக்கப்பட்ட நிபந்தனையின்படி எவ்வகையில் முடிவைக் காண விரும்பினாலும் அதற்கு நாம் எந்நிலையிலும் ஆயத்தமாக இருக்கிறோம் என ஏகனும், இணையில்லாதவனுமாகிய அந்த இறைவன் மீது

ஆணையிட்டுக் கூறுகிறோம். ஆனால் வாசகர்கள் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் ஆரியர்ககளைச் சேர்ந்த இளைஞர்களே! புதிதாக (அதில்) சிக்கியிருப்பவர்களே! நீங்களும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வேதத்தில் ஒருபோதும் ஓரிறை கொள்கை இல்லை; அது இடத்திற்கிடம் இணைவைப்பின் போதனைகளால் கலந்திருக்கிறது; கண்டிப்பாகக் கலந்திருக்கிறது. எவரும் அதை விடுவிக்க முடியாது. அதன் எல்லா திரைகளும் விலகி விடும் நாள் வந்து கொண்டிருக்கிறது. எனவே எந்த இறைவனுடைய நீதிமன்றத்திலிருந்து எந்த வகையிலும் மறைய முடியாதோ அந்த இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள்.'' *(சுர்மயே சஷ்மயே ஆர்யா பக்கம் 168 ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 216)*

''இறைவனைப் புகழ்ந்து சலவாத் ஓதிய பிறகு ஏகனும், இணையில்லாதவனும், தேவைகளற்றவனுமாகிய அல்லாஹ்வின் அடியான், மர்ஹூம் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிபின் மகன் (பராஹீனே அஹ்மதிய்யாவின் நுலாசிரியன்) கருணையுள்ள இறைவன் ஜல்லஷானஹூ வ அஸ்ஸ இஸ்முஹூவின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் எனது அன்பிற்குரிய வாழ்வின் பெரும் பகுதியை மார்க்கத்தைப் பற்றி ஆய்வு செய்வதில் செலவிட்டு, உலகில் உண்மையானதும் அல்லாஹ்வின் புறமிருந்துள்ளதுமான மார்க்கம் இஸ்லாம் மார்க்கம்தான் என நிரூபித்துள்ளேன். மேலும் ஹஸ்ரத் சய்யிதுனா வ மவ்லானா முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இறைவனின் தூதரும், இறைதூதர்களில் மிகச் சிறந்தவரும் ஆவார்கள். மேலும் திருக்குர் ஆன் அல்லாஹ் ஜல்ல ஷானஹூவின் தூய முழுமையான வேதமாகும். எல்லா தூய உண்மைகளையும் சத்தியங்களையும் கொண்டதாகும். இந்த தூய இறைவாக்கில் கூறப்பட்டவையெல்லாம், அல்லாஹ் தனது சொந்த இருப்பு, தொன்மையான இருப்பு, முழுமையான ஆற்றல்

மற்றும் தனது மற்ற அனைத்து பண்புகளிலும் தனித்தவனும், இணையில்லாதவனுமாவான் என்பதாகும். மேலும் எல்லா படைப்பினங்களையும் படைத்தவன் ஆவான்; மேலும் எல்லா ஆன்மாக்களையும், உடல்களையும் படைத்தவன் ஆவான்; மேலும் உண்மையாளருக்கும் நன்றியுணர்வுள்ளவருக்கும், நம்பிக்கை கொண்டவர்களுக்கும் அவன் நிரந்தர ஈடேற்றத்தை வழங்குவான். அவன் அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனும் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்பவனுமாவான். அவ்வாறே திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ள மற்ற இறைபண்புகள் மற்றும் போதனைகள் அனைத்தும் உண்மையும் சரியானவையுமாகும். மேலும் நான் உள்ளத்தின் உறுதியுடன் இந்த எல்லா விஷயங்களையும் உண்மை என கருதுகிறேன். மேலும் உள்ளத்தாலும் உயிராலும் அவற்றின் மீது உறுதி கொள்கிறேன்.'' *(சுர்மயே சஷ்மயே ஆர்யா பக்கம் 252-253 ரூஹானீ கஸாயின் தொகுதி 2 பக்கம் 302-303)*

## சஷ்மயே மஸீஹி

''எவன் கையில் என் உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நான் தூய இறைவனின் உறுதியான, திடமான உரையாடலினால் சிறப்பூட்டப்பட்டிருக்கிறேன். மேலும் அநேகமாக ஒவ்வொரு நாளும் சிறப்பூட்டப்படுகிறேன். எந்த இறைவனைப் பற்றி நீ ஏன் என்னை விட்டு விட்டாய் என இயேசு கூறுகிறாரோ அவன் என்னை விட்டு விடவில்லை என நான் காண்கிறேன்.'' *(சஷ்மயே மஸீஹி பக்கம் 32 ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 353)*

## நஸீமே தஃவத்

''மதிப்பிற்குரியவர்களே! அர்ஷ் என்பது பௌதீகமானதும் படைக்கப்பட்ட ஒன்றும் ஆகும்; அதில் இறைவன் அமர்ந்திருக்கிறான் என்பது முஸ்லிம்களின் கொள்கையன்று. முழுக் குர்ஆனையும் ஆரம்பத்திலிருந்து

கடைசி வரை படியுங்கள். அர்ஷும் ஒரு எல்லைக்குட்டபட்டதும் படைக்கப்பட்டதுமான ஒன்று என அதில் எங்கேயும் காண மாட்டீர்கள். உருவத்தைக் கொண்ட ஒவ்வொன்றையும் நானே படைத்திருக்கிறேன் என்றும், நானே வானம் பூமி ஆன்மாக்கள் மற்றும் அவற்றின் எல்லா ஆற்றல்களையும் படைத்திருக்கிறேன் என்றும், நான் என்னிடத்தில் சொந்தமாக நிலை பெற்றிருக்கிறேன்; மேலும் எல்லா பொருளும் என்னால் நிலை பெற்றிருக்கிறது. இருக்கின்ற ஒவ்வோர் அணுவும், ஒவ்வொரு பொருளும் என்னுடைய படைப்பு ஆகும் என்றும் இறைவன் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறான். ஆனால் அர்ஷும் ஒரு பௌதீகமான ஒரு பொருள்; அதை படைப்பவன் நானாவேன் என்று அவன் எங்கேயும் கூறவில்லை. அர்ஷ் ஒரு பௌதீகமானதும் படைக்கப்பட்டதுமாகும் என ஓர் ஆரியர் திருக்குர்ஆனிலிருந்து எடுத்துக் காட்டினால் அவர் காதியானிலிருந்து வெளியே செல்வதற்கு முன் ஆயிரம் Ï ð£Œ ª è£´ Š«ð¡ . **எந்த இறைவன் மீது பொய்யான ஆணையிட்டுக் கூறுவது சாபத்திற்குரியவர்களின் வேலையோ அவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். திருக்குர்ஆனின் அந்த வசனத்தை காட்டியதுமே நான் ஆயிரம் ரூபாயை கொடுத்து விடுவேன்.** அப்படியில்லை என்றால் இறைவன் மீது பொய் கூறும் அப்படிப்பட்ட நபர் சாபத்திற்குரியவராவார் என நான் மரியாதையுடன் கூறுகிறேன்.'' *(நஸீமே தஃவத் பக்கம் 84 ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 453-454)*

## நுஸூலுல் மஸீஹ்

''எல்லாவற்றிக்கும் எஜமானன் இறைவன் ஆவான். எனவே ஒரு நூலின் ஏதாவது அருமையான சொற்றொடரை அல்லது ஒரு கவிதைத் தொகுப்பின் அருமையான கவிதையை வஹியாக எனது உள்ளத்தில்

இறக்கும் அதிகாரத்தையும் அவன் பெற்றிருக்கிறான். இது அரபி மொழி பற்றியதாகும். ஆனால் இதை விட அதிகமாக ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால், சில இல்ஹாம்கள் எனக்கு கொஞ்சமும் தெரியாத மொழிகளிலும் எனக்கு இறங்குகின்றன. உதாரணமாக, ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதம் அல்லது எபிரேயம் ஆகிய மொழிகளில் இறங்குகின்றன. பராஹீனே அஹ்மதிய்யாவில் அவற்றின் சில முன்மாதிரிகள் எழுதப்பட்டுள்ளன. **எந்தவன் கையில் எனது உயிர் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணையாக! என்னுடன் அல்லாஹ்வின் நடைமுறை இதுவாகவே இருக்கிறது.** மேலும் இது எனக்கு வழங்கப்பட்டுள்ள அடையாளங்களில் ஓர் அடையாளமகும்.'' *(நுஸூலுல் மஸீஹ் பக்கம் 57 . ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 435)*

''நான் இதற்கு முன்பும் கீழ்வரும் ஒப்புதலை எனது நூல்களில் ஆணையிட்டு மக்களுக்கு வெளிப்படுத்தி இருக்கிறேன். **மேலும் இப்போது எவன் பிடியில் எனது உயிர் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையிட்டு எழுதுகிறேன்:** ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹீஹ் புகாரி, முஸ்லிம், மற்ற ஆறு சஹீஹான நூல்கள் ஆகியவற்றிலுள்ள ஹதீஸுகளில் எந்த வாக்களிப்பட்ட மஸீஹைப் பற்றி செய்தி தெரிவித்துள்ளார்களோ அந்த நபர் நானேயாவேன். وَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًا (சாட்சியாக இருப்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன்)''

*(எழுதுபவன்: மீர்ஸா குலாம் அஹ்மது அஃபல்லாஹு அன்ஹு வ அய்யதஹு 17, ஆகஸ்டு 1899); (அகாயிதே தஃலீமாத் பக்கம் 137 நஸாரத் தஃவதோ தப்லீக், காதியானில் அக்டோபர் 1955-ல் அச்சிடப்பட்டது)*

''எந்த இறைவன் என்னை அனுப்பினானோ எவன் மீது இட்டுக்கட்டிக் கூறுவது சாபத்திற்குரியவர்களின் வேலையோ அந்த **இறைவன் மீது ஆணையாக!** அவன் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக ஆக்கி அனுப்பி

இருக்கிறான். திருக்குர்ஆனின் வசனங்களின் மீது ஈமான் கொள்வதைப் போன்றே எவ்வகையிலும் அணுவளவு வித்தியாசமுமின்றி எனக்கு இறங்கிய இறைவனின் மிகத்தெளிவான வஹியின் மீது நான் ஈமான் கொள்கிறேன். அதன் உண்மை அதன் தொடரான அடையாளங்களால் எனக்கு தெளிவாகி விட்டது. மேலும் **எனக்கு இறங்கும் தூய வஹி ஹஸ்ரத் மூஸா , ஹஸ்ரத் ஈஸா மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) ஆகியோர் மீது தனது கூற்றை இறக்கிய அந்த இறைவனின் கூற்றேயாகும் என நான் கஅபத்துல்லாஹ்வில் நின்று ஆணையிட்டுக் கூற முடியும்.**'' *(ஒரு தவறான எண்ணம் அகற்றப்படுகிறது பக்கம் 3 ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 210)*

## கராமாத்துஸ் ஸாதிகீன்

''நான், அல்லாஹ் ஜல்ல ஷானஹூவின் மீது ஆணையாகக் கூறுகிறேன்: நான் காஃபிர் அல்லன். லா இலாஹ இல்லல்லாஹ் (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஆவான்) என்பது எனது கொள்கையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி وَلٰكِنْ رَسُولَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ (அவர்கள் நபிமார்களுக்கு முத்திரைஆவார்) என்பது எனது ஈமான் ஆகும். நான் எனது இந்த வாக்குமூலத்தின் உண்மைக்கு சான்றாக இறைவனுக்கு எத்தனை தூய பெயர்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு திருக்குர்ஆனில் எழுத்துக்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு இறைவனின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மேன்மைகள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். அல்லாஹ் மற்றும் ரஸூலின் கூற்றுக்கு எதராக எனது எந்தக் கொள்கையும் இல்லை. எவர் அவ்வாறு கருதுகிறாரோ அது அவருடைய சொந்த தவறான எண்ணமாகும். எவர் இப்போதும் என்னை காஃபிர் எனக் கருதுகிறாரோ காஃபிர் எனக் கூறுவதிலிருந்து விலக

மாட்டாரோ அவர் மரணத்திற்குப் பிறகு கேள்வி கேட்கப்படுவார் என உறுதியாக நினைவில் கொள்ளட்டும். **இறைவன் மீதும், இறைதூதர் மீதும் எனக்கு எத்தகைய உறுதி இருக்கிறதென்றால் இக்காலத்தின் எல்லா மக்களின் ஈமான்களை தராசின் ஒரு தட்டிலும், எனது ஈமானை இன்னொரு தட்டிலும் வைத்தால் அல்லாஹ்வின் அருளால் எனது இந்த தட்டுதான் அதிக எடையுள்ளதாக இருக்கும் என நான் அல்லாஹ் ஜல்ல ஷானஹுவின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.** *(கராமாத்துஸ் ஸாதிகீன் பக்கம் 25 ரூஹானீ கஸாயின் தொகுதி 7 பக்கம் 67)*

## திர்யாக்குல் குலூப்

''எவன் என்னை அனுப்பி இருக்கிறானோ அந்த இறைவன் மீது ஆணையாக! ஒரு கடுமையான கிறித்தவர் அல்லது இந்து, அல்லது ஆரியர் பகல் வெளிச்சம் போன்று தெளிவாக இருக்கும் சென்ற கால அடையாளங்களை மறுத்தாலும் முஸ்லிமாவதற்காக ஏதாவது அடையாளத்தை விரும்பினால் இது பற்றி அவரிடம் தீய எண்ணத்தின் எவ்வித நாற்றமும் காணப்படாமல், முட்டாள்தனமான வாக்குவாதம் செய்யாமல் சாதாரணமாக ஏதாவதொரு பத்திரிகையின் மூலமாக, அவர் ஏதாவது அடையாளத்தைக் காண்பதால் அது எந்த அடையாளமாக இருந்தாலும் ஆனால் அது மனிதனின் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டதாக இருந்தால் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வேன் என வெளியிட்டால் ஓர் ஆண்டு முடிவடைவதற்குள் அவர் அடையாளத்தைக் கண்டு கொள்வார் என நான் நம்புகிறேன். ஏனெனில் என்னால் பின்பற்றப்படும் நபிக்குக் கிடைத்த அந்த வாழ்க்கையிலிருந்து நான் ஒளியைப் பெறுகின்றேன். அவர்களுடன் போட்டியிட யாராலும் முடியாது.'' *(தர்யாக்குல் பக்கம் 6-7 ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 140)*

''உலகில் இரண்டு வாழ்க்கைகள் புகழுக்குரியவையாகும். ஒன்று, உயிருள்ளவனும் மற்றவற்றை உயிருடன்

நிலைபெறச் செய்பவனும் அருளின் ஆரம்பமுமாகிய இறைவனின் வாழ்க்கை. இரண்டாவது, அருளை வழங்குவதும் இறைவனின் பண்பை வெளிப்படுத்தக் கூடியதுமான வாழ்க்கையாகும். எனவே வாருங்கள்; அந்த வாழ்க்கை நமது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையேயாகும் என நாம் காட்டுகிறோம். அதற்கு ஒவ்வொரு காலத்திலும் வானம் சாட்சி பகர்ந்து கொண்டு வந்திருக்கின்றது. இப்போதும் சாட்சி பகர்கின்றது. மேலும் எவரிடம் அருளை வழங்கும் வாழ்க்கை இல்லையோ அவர் மரணித்தவராவார்; உயிருள்ளவர் அல்லர். **மேலும் எந்த இறைவனின் பெயரை எடுத்துரைத்து பொய் கூறுவது கடுமையான கயமைத்தனமோ அந்த இறைவனின் மீது ஆணையிட்டு நான் கூறுகிறேன்:** எனது சான்றோரும், கட்டுப்படத் தகுந்தவருமாகிய சய்யிதுனா முஹம்மது (ஸல்) அவர்களின் ஆன்மீகமான நிரந்த வாழ்க்கைக்கும் முழுமையான கம்பீரத்திற்கும் முழுமைக்கும் இறைவன் எனக்கு வழங்கியிருக்கும் சான்று என்னவென்றால், நான் அன்னாரைப் பின்பற்றியதனாலும், அன்னாருடன் கொண்ட அன்பினாலும் வானத்தின் அடையாளங்களை என்னிடம் இறங்குவதாகவும், உள்ளம் உறுதியின் ஒளியினால் நிரம்பியிருப்பதாகவும் கண்டேன். மேலும் எந்த அளவுக்கு மறைவான அடையாளங்களைக் கண்டேன் என்றால் அவற்றின் மிகத் தெளிவான ஒளிகளின் மூலம் நான் எனது இறைவனைக் கண்டு கொண்டேன்.''

*(திர்யாக்குல் குலூப் பக்கம் 6-7 . ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 140)*

## துஹ்ஃபா கோலடவிய்யா

''எவன் கையில் எனது உயிர் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணையாக! அவன் என்னை உண்மைப்படுத்துவதற்காக வானத்தில் (சூரிய சந்திர கிரகணம் என்ற இந்த) அடையாளத்தைக் காட்டியிருக்கிறான். அதுவும் மவ்லவிகள் எனக்கு தஜ்ஜால்,

பெரும் பொய்யன், காஃபிர், -ஏன்-பெரும் காஃபிர் என்று பெயர் வைத்த அந்த நேரத்தில் (இந்த அடையாளத்தைக்) காட்டினான். இது இன்றிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்னர் பராஹீனே அஹ்மதிய்யாவில் முன்னறிவிப்பாக வாக்குறுதி அளிக்கப்பட்ட அதே அடையாளம்தான். அது என்னவென்றால்:

قُلۡ عِنۡدِیۡ شَهَادَةٌ مِنَ اللّٰهِ فَهَلۡ اَنۡتُمۡ مُؤۡمِنُوۡن. قُلۡ عِنۡدِیۡ شَهَادَةٌ مِنَ اللّٰهِ فَهَلۡ اَنۡتُمۡ مُسۡلِمُوۡن

அதாவது நீர் அவர்களிடம் கூறுவீராக: என்னிடம் இறைவனின் ஒரு சாட்சி இருக்கிறது; நீங்கள் அதன் மீது நம்பிக்கை கொள்வீர்களா? இல்லையா? பிறகு நீர் அவர்களிடம் கூறுவீராக: என்னிடம் இறைவனின் ஒரு சாட்சி இருக்கிறது; நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களா? இல்லையா? நினைவில் கொள்ளுங்கள்: எனது உண்மைக்கு இறைவன் புறமிருந்து பல சாட்சிகள் இருக்கின்றன. நூற்றுக்கும் அதிகமான முன்னறிவிப்புகள் இருக்கின்றன; அவை நிறைவேறி விட்டன. அவற்றிற்கு இலட்சக்கணக்கான மனிதர்கள் சாட்சிகளாவர். ஆனால் இந்த இறையறிவிப்பில் (சூரிய, சந்திர கிரகணம் பற்றிய) அந்த முன்னறிவிப்பு சிறப்பைக் குறிப்பிடுவதற்காக வந்துள்ளது. அதாவது, ஆதம் (அலை) அவர்களிலிருந்து இது வரை எவருக்கும் வழங்கப்படாத அடையாளம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. சுருக்கமாக, இந்த அடையாளம் என்னை உண்மைப்படுத்துவதற்காக இருக்கிறது; எவர் இதுவரை பொய்ப்படுத்தப்படவில்லையோ எவர் மீது காஃபிர், பொய்யர் மற்றும் தீயவர் என்ற கூக்குரல் எழவில்லையோ அவரை உண்மைப்படுத்துவதற்காக அல்ல என்று **நான் கஅபத்துல்லாஹ்வில் நின்று கொண்டு ஆணையிட்டுக் கூற முடியும்.** மேலும் அவ்வாறே இந்த அடையாளத்தினால் (இமாம் மஹ்திக்கான) நூற்றாண்டு தீர்மானிக்கப்பட்டு விட்டது. *(துஹ்ஃபயே கோல்டவிய்யா பக்கம் 33. ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 143)*

## கிதாபுல் பரிய்யா

''முஹம்மது (ஸல்) அவர்கள் ஈருலகிற்கும் இமாமும் விளக்கும் ஆவார்கள். வானத்தையும் பூமியையும் ஒளிமயமாக்குபவர்கள் ஆவார்கள். நான் இறையச்சத்தினால் அவர்களை இறைவன் என்று கூறவில்லை. ஆயினும் இறைவன் மீது ஆணையாக! அவர்கள் உலகத்தினருக்கு இறைவனைக் காட்டித் தருபவர்களாவார்கள்.'' *(கிதாபுல் பரிய்யா பக்கம் 129. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 157)*

*(யாத்கீர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் செயலர் முஹம்மது இல்யாஸ் அஹ்மதி தொகுத்து வெளியிட்ட **'ஷானே ரஸூலே அஹ்மதி'** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)*

## அல்ஹகம் 31, மே 1902

''எனவே எல்லாப் புகழையும், பெருமையையும், எல்லாஆழகிய பண்புகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் திருப்ப வேண்டும் என்பதே எனது உள்ளத்தில் உள்ள சரியான உண்மையான பேரார்வமாகும் என நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். இறைவனின் ஓரிறைமையையும், ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும் உலகில் நிலைநாட்டுவதுமே எனது தோற்றத்தின் உண்மையான குறிக்கோளாகும். மேலும் எனது எல்லா மகிழ்ச்சிகளும் இதிலேயே உள்ளன. என்னைப் பற்றி அல்லாஹ் எந்த அளவுக்கு புகழுக்குரிய சொற்களையும், கண்ணியத்திற்குரிய விஷயங்களையும் கூறியிருக்கிறானோ அவையும் உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கமே திரும்புகின்றன. ஏனெனில் நான் அன்னாரின் அடிமையாவேன்; மேலும் அன்னாரின் நுபுவ்வத்தின் விளக்கிலிருந்தே ஒளியைப் பெறுபவனாவேன். நமக்கென்று சுதந்திரமாக எதுவுமில்லை. இந்த காரணத்தினால், ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களுக்குப் பிறகு, நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பயனடையாமல் சுதந்திரமாக நியமிக்கப்பட்டுள்ளேன் என்றும், இறைவனுடன் தொடர்பு கொண்டுள்ளேன் என்றும் வாதிக்கின்றார் என்றால் அவர் நிராகரிக்கப்பட்டவரும், கைவிடப்பட்டவரும் ஆவார் என்பது எனது உறுதியான கொள்கையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் எவரும் அல்லாஹ்வை அடையும் வாசல் வழியாக வர முடியாது என்பதில் இறைவனின் நிரந்தமான முத்திரை பதிந்து விட்டது.'' *(அல்ஹகம் 31, மே 1902)*

## அஹ்மதிய்யா தஃலீமீ பாக்கெட் புக் (பாகம் 1)

(முஹம்மது நஸீர் சாஹிப் ஃபாஸில் இயற்றியது)

அல்லாஹ் யூதர்களை விளித்துக் கூறுகிறான்:

قُلْ يَا أَيُّهَا الَّذِينَ هَادُوا إِنْ زَعَمْتُمْ أَنَّكُمْ أَوْلِيَاءُ لِلَّهِ مِنْ دُونِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ إِنْ كُنْتُمْ صَادِقِينَ

"நீர் கூறுவீராக: யூதர்களே! மற்றெல்லா மக்களையும் விட நீங்கள்தாம் அல்லாஹ்வின் நண்பர்கள் என்று நீங்கள் உரிமை கொண்டடுகின்றீர்கள் என்றால் இ(ந்த வாதத்)தில் உண்மையாளர்களாயின் நீங்கள் மரணத்தை நாடுங்கள். (அதாவது முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் முபாஹலா செய்யுங்கள்.) திருக்குர் ஆன் 62:7

இந்த வசனத்திலிருந்து, மரணத்தை நாடுபவர் அந்த நாட்டத்திற்குப் பிறகு சீக்கிரம் நாசமாவதிலிருந்து தப்பித்து விட்டால் அது அந்த விஷயத்தின் உண்மைக்கு சாட்சியாகிவிடும். ஒருவர் தவறான எண்ணத்தினால் தன்னைத் தானே இறைவனின் அன்பிற்குரியவனாகக் கருதி மரணத்திற்கு ஆசைப்பட்டால் பிறகு அவருடைய மரணம் இறையடையாளமாகிவிடுகிறது என்பது தெரிய வருகிறது. உதாரணமாக, அபூஜஹ்ல் பத்ர் போரில் இறைவா! எங்கள் இருவரில் எவர் பொய்யரோ அவருக்கு

இந்த இடத்திலேயே மரணத்தைக் கொடுப்பாயாக என ஆசைப்பட்டான். அதன்படி அவன் பத்ர் போரில் கொல்லப்பட்டான். மேலும் அவனுடைய மரணம் இஸ்லாத்தின் உண்மைக்கு அடையாளமாகி விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை பொய்யராகக் கருதியவாறும் போட்டியில் தம்மை உண்மையாளராகக் கருதியவாறும் எவர்கள் பத் துஆ (தீய துஆ) செய்தார்களோ, அன்னார் (அலை) உண்மையாளராக இருக்கும் நிலையில் தமக்குத் தாமே மரணத்தை விரும்பினார்களோ அவர்கள் அனைவரும் நாசமாயினர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், தாம் அல்லாஹ்வின் புறமிருந்து வந்தவர்கள் என்பதில் மக்களுக்கு உறுதித்தன்மையை உருவாக்குவதற்காக இறைவனிடம் இந்த துஆவை செய்தார்கள்:

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نحمده و نصلى على رسوله الكريم

رَبَّنَا افْتَحْ بَيْنَنَا وَبَيْنَ قَوْمِنَا بِالْحَقِّ وَأَنْتَ خَيْرُ الْفَاتِحِينَ

வானத்தையும் பூமியையும் படைத்த ஆற்றல் மிக்கவனே!கருணையுள்ளவனும்,அருள்பாலிப்பவனும், நேர்வழிகாட்டுபவனுமே! உள்ளங்களைப் பார்ப்பவனே! இறைவா! எந்த விஷயமும் உன்னிடம் மறைவானதாக இல்லை. நீ என்னை கட்டுப்படாதவனாகவும், தீங்குகளால் நிரம்பியவனாகவும் காண்கின்றாய் என்றால் நீ என்னை தீய பரம்பரையைச் சேர்ந்தவனாகக் காண்கின்றாய் என்றால் நீ இந்தத் தீயவனை துண்டு துண்டாக்குவாயாக. மேலும் எனது எதிரிகளின் கூட்டத்தை மகிழ்ச்சியடையச் செய்வாயாக. அவர்களின் உள்ளங்களில் உனது கருணையின் மழையைப் பொழிய வைப்பாயாக. மேலும் உனது அருளால் அவர்களின் எல்லா குறிக்கோள்களையும் நிறைவேற்றுவாயாக. மேலும் எனது வாசலிலும் சுவற்றிலும்

நெருப்பைப் பொழிய வைப்பாயாக. எனது எதிரியாக ஆகிவிடுவாயாக. மேலும் எனது திட்டங்களை நாசமாக்குவாயாக. ஆனால் நீ என்னை உனக்குக் கட்டுப்படுபவனாகக் கண்டால், எந்த அன்பின் இரகசியத்தை நீ உலகத்தை விட்டும் மறைத்து வைத்திருந்தாயோ அதை நீ என்னிடம் கண்டால் என்னுடன் நீ அன்புடன் நடந்து கொள்வாயாக. மேலும் அந்த இரகசியத்தை கொஞ்சம் வெளிப்படுத்துவாயாக.'' *(ஹகீக்கத்துல் மஹ்தி பக்கம் 1. ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 434)*

இந்த துஆவிற்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கையில் பல அடையாளங்கள் வெளிப்பட்டன. மேலும் இறைவன் அவர்களுக்கு உலகத்தில் ஒப்புக்கொள்ளப்படும் நிலையை வழங்கினான். மேலும் அவர்களை அழிப்பதற்கு பதிலாக அவர்களுக்கு எல்லா வகையிலும் முன்னேற்றத்தை வழங்கி, தனது உண்மை மற்றும் அன்பிற்கான சான்றைக் காட்டி விட்டான். இதில் சிந்திப்பவர்களுக்கு ஒரு மிகப் பெரிய அடையாளம் இருக்கிறது.'' *(அஹ்மதிய்யா பாக்கெட் புக் பாகம் 1 பக்கம் 210 முதல் 212 வரை தொகுப்பு: காஸி முஹம்மது நஸீர் சாஹிப் ஃபாஸில். நஸாரத் இஷாஅத் ரப்வா வெளியீடு, ஜூன் 2012)*

## மகத்தான முன்னறிவிப்பு
## இஸ்லாத்தின் மகத்துவமிக்க எதிர்காலம் இறுதியானதும் முழுமையானதுமான வெற்றிக்குரிய நாள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''இறைவன் எனக்கு மீண்டும் மீண்டும் செய்தி தெரிவித்திருக்கின்றான். அவன் எனக்கு மிகவும் மகத்துவத்தை வழங்குவான். மேலும் என்னைப் பற்றிய அன்பை உள்ளங்களில் உருவாக்குவான். எனது ஜமாஅத்தை முழு உலகிலும் பரப்புவான். மேலும் எல்லா

பிரிவுகளின் மீதும் எனது பிரிவுக்கு வெற்றியை வழங்குவான். எனது பிரிவைச் சேர்ந்த மக்கள் அறிவிலும், இறைஞானத்திலும் எந்த அளவுக்கு மேன்மையடைவார்கள் என்றால் அவர்கள் தமது உண்மையின் ஒளியின் மூலமாக, தமது சான்றுகள் அடையாளங்கள் மூலமாக அனைவரின் வாயையும் அடைத்து விடுவார்கள். மேலும் ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்தும். மேலும் இந்த ஜமாஅத் வலுவாக வளரும்; மலரும். எதுவரை என்றால் பூமியில் பரவி விடும். பல தடைகள் உருவாகும்; சோதனைகள் வரும். ஆனால் இறைவன் அனைத்தையும் இடையிலிருந்து அகற்றி விடுவான். மேலும் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான். மேலும் இறைவன் என்னை நோக்கி, நான் உமக்கு அருளுக்கு மேல் அருளை வழங்குவேன்; எதுவரையென்றால் மன்னர்கள் உமது ஆடைகளிலிருந்து அருள்களை தேடுவார்கள்.

எனவே கேட்பவர்களே! இந்த விஷயங்களை நினைவில் வையுங்கள். **மேலும் இந்த முன்னறிவிப்புகளை உங்கள் பெட்டிகளில் பாதுகாத்து வையுங்கள். இது இறைவனின் சொல்லாகும். ஒருநாள் அது நிறைவேறும்.''** *(தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 21. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 409)*

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''அனைத்து மக்களே! கேட்டுக் கொள்ளுங்கள். இது வானத்தையும் பூமியையும் படைத்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் இந்த ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரப்புவான். மேலும் சான்று மற்றும் ஆதாரத்தின் அடிப்படையில் அனைவரின் மீதும் இவர்களுக்கு வெற்றியை வழங்குவான். அந்த நாட்கள் வரவிருக்கின்றன; இன்னும் கூறுவதென்றால் அவை அண்மையில் இருக்கின்றன. உலகில் இந்த ஒரு மார்க்கம் மட்டுமே கண்ணியத்துடன் நினைவு கூரப்படும்.

இறைவன் இந்த மார்க்கத்திலும், ஜமாஅத்திலும் மிகவும் மேலான வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அருளை வழங்குவான். இதை இல்லாமல் ஆக்குவது பற்றி சிந்திக்கும் ஒவ்வொருவரையும் தோல்வியுறக் செய்வான். மேலும் இந்த வெற்றி மறுமை வரும் வரை நிரந்தரமாக இருக்கும்..........இன்றிலிருந்து 3 நூற்றாண்டுகள் முழுமையடைந்திருக்காது. ஈஸாவை எதிர்பார்த்திருக்கின்ற முஸ்லிம்களாயினும், கிறித்தவர்களாயினும், மிகவும் அவநம்பிக்கையடைந்து இந்த பொய்யான கொள்கையை விட்டு விடுவார்கள். மேலும் உலகில் ஒரேமார்க்கம்தான் இருக்கும். ஒரே தலைவர்தான் இருப்பார். நான் ஒரு விதையை விதைக்க வந்துள்ளேன். எனவே அந்த விதை எனது கைகளால் விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும். அதைத் தடுப்பவர் யாருமில்லை.'' *(தஸ்கிரதுஷ் ஷஹாததைன் பக்கம் 64,65 ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 66,67)*

## உண்மையான வாதம் பற்றிய அறைகூவல்

''எனக்கு எதிராக உலகிலுள்ள எல்லா சமுதாயங்களும் ஒன்று சேர்ந்தாலும் எவருக்கு இறைவன் மறைவான செய்தியை தெரிவிக்கின்றான்; யாருடைய துஆக்களை கேட்கின்றான்; யாருக்கு உதவி செய்கின்றான்; யாருக்காக மாபெரும் வெற்றிகளைக் காட்டுகிறான் என்பதில் போட்டி இருந்தால் **நானே மேலோங்கி இருப்பேன் என நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.** இந்த சோதனையில் எனக்குப் போட்டியாக வருபவர் யாராவது இருக்கின்றாரா? இஸ்லாம் மார்க்கம் உண்மையானது என்பதை எதிரிகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இறைவன் எனக்கு ஆயிரக்கணக்கான அடையாளங்களை காட்டியிருக்கிறான். நான் எனக்கு எந்த கண்ணியத்தையும் விரும்பவில்லை; மாறாக, எவனுக்காக நான் அனுப்பப்பட்டுள்ளேனோ

அவனது கண்ணியத்தை விரும்புகிறேன்.'' *(ஹகீகத்துல் வஹீ பக்கம் 176 ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 181)*

## பகிரங்கமான அறைகூவல்

''அவன் மீதே ஆணையாக! இப்போதும் நான் அவனைக் காண்கின்றேன். உலகம் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனால் என்னை அனுப்பியவன் என்னை அறிகிறான். என்னுடைய அழிவை நாடுவது இவர்களின் தவறும், முற்றிலும் பேறிழந்த நிலையுமாகும். நான், உண்மையான எஜமானன் தனது கையால் நட்டிய மரமாவேன். எவர் என்னை வெட்ட நினைக்கிறாரோ அவருடைய முடிவு காரூன், யூதாஸ், அபூஜஹ்ல் ஆகியோரிடமிருந்து கொஞ்சம் பங்கை வாங்கிக் கொள்ள விரும்புகிறார் என்பதைத் தவிர வேறெந்த விளைவும் ஏற்படப் போவதில்லை. எவராவது களத்திற்கு வர மாட்டாரா? என்றும், நுபுவ்வத் வழியில் என்னிடம் தீர்ப்பை வாங்கிக் கொள்ள விரும்பட்டும் என்றும் இறைவன் யாருடன் இருக்கிறான் என்பதை பிறகு பார்க்கட்டும் என்றும் நான் நாள்தோறும் கண்விழித்துக் காத்திருக்கிறேன். ஆனால் களத்தில் இறங்குவது எந்தவோர் ஆண்மையற்றவரின் வேலையன்று. ஆயினும் நமது நாட்டில், பஞ்சாபில் குஃப்ர் படையின் தளபதி குலாம் தஸ்தகீர் இருந்தார்; அவர் பயன்பட்டார். இப்போது அவருக்கு நிகரானவரை இந்த மக்களிலிருந்து எவராவது வெளிவருவது முடியாததும், சாத்தியமற்றதும் ஆகும். மக்களே! இறுதி காலம் வரை என்னுடன் நன்றியுடன் நடந்து கொள்ளும் ஒரு கை என்னுடைய கையுடன் இருக்கிறது என்பதை உறுதியாக புரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய ஆண்கள், உங்களுடைய பெண்கள், உங்களுடைய இளைஞர்கள், உங்களுடைய முதியோர்கள், உங்களில் சிறியவர்கள்,உங்களில் பெரியவர்கள் அனைவரும் சேர்ந்து என்னை நாசமாக்குவதற்காக துஆக்களைச் செய்தாலும், சஜ்தா செய்து செய்து மூக்கு

தேய்ந்து போனாலும், கை செயலிழந்து போனாலும் இறைவன் உங்களின் துஆவை ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டான். மேலும் அவன் தனது வேலையை முழுமை செய்யாதவரை நிற்க மாட்டான். மேலும் மனிதர்களில் ஒருவர் கூட என்னுடன் இல்லாவிட்டாலும் இறைவனின் மலக்குகள் என்னுடன் இருப்பார்கள். நீங்கள் சாட்சியை மறைப்பீர்கள் என்றால் கற்கள் எனக்காக சாட்சி பகரக் கூடும். எனவே உங்கள் உயிர்களின் மீது அநீதியிழைத்துக் கொள்ளாதீர்கள். பொய்யர்களின் முகம் வேறொன்றாக இருக்கிறது; உண்மையாளர்களின் முகம் வேறொன்றாக இருக்கிறது. இறைவன் எந்த விஷயத்தையும் தீர்ப்பளிக்காமல் விட்டு விடுவதில்லை.'' *(அர்பயீன் எண்: 3 பக்கம் 14,15 . ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 399,400)*

***** ***** *****